DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளக்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524
www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1384
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday October 14, 2022

# நாளை சனிக்கிழமை 15ம் திகதி ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள உதயன் சர்வதேச விருது விழாவில் வெளிநாட்டு விருதுகளை பெறும் வெற்றியாளர்கள்



கனடா உதயன் பத்திரிகை நிறுவனத்தின் ஏற்பாட்டில் 16வது ஆண்டாக நாளை சனிக்கிழமை 15ம் திகதி ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள உதயன் சர்வதேச விருது விழாவில் வெளிநாட்டு விருதுகளை பெறும் வெற்றியாளர்கள் இருவர் கனடா வந்து சேர்ந்தனர்.

ஸ்காபுறோவில் கென்னடி வீதியில் அமைந்துள்ள கென்னடி கொன்வென்சன் மண்டபத்தில் நடைபெறவுள்ள உதயன் சர்வதேச விருது விழாவில் இலங்கையர்களுக்கான சிறப்பு விருது பெறும் மூவரில் உதயன் சிறப்பு விருது (இலங்கை) மற்றும் உதயன் வாழ்நாள் சாதனையாளர் விருது (தமிழ்நாடு) ஆகிய விருதுகளைப் முறையே பெறவுள்ள யாழ்ப்பாண மாவட்ட அரசியல் பிரமுகரும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தற்போதைய தலைவருமான நிரோஷ் தியாகராஜா மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் வே. சங்கரநாராயணன் ஆகியோர் நேற்று முன்தினம் கனடா வந்து சேர்ந்தனர். அவர்களை விமான நிலையத்தில் வரவேற்க கனடா உதயன் நண்பர்கள் குழு அங்கு சென்றிருந்தது.

அப்போது எடுக்கப்பெற்ற புகைப்படங்கள் இங்கே காணப்படுகின்றன.



மேலும். ஏற்கெனவே யாழ்ப்பாண-த்திலிருந்து கனடாவிற்கு வருகை தந்துள்ள பிரபல இந்து சமய அறிஞரும் பேச்சாளரும் எழுத்தாளரும் எழுத்தாளருமான பிரம்ஸ்ரீ சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) அவர்களும் நாளைய உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழாவில் உதயன் வாழ்நாள் சாதனையாளர் விருது (இலங்கை) என்னும் கௌரவம் பெறள்ளார்.

இவ்வருட உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழாவில் மத்திய மா-காண மற்றும் உள்ளாட்சி சபைகளின் உறுப்பினர்களும் அமைச்சர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். மேலதிக விபரங்களுக்கு 416 732 1608 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

## கனடா நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பின் 25வது ஆண்டு விழா

நாதஸ்வர வித்துவான் ஆ. முருகதாஸ் அவர்களின் நிர்வாகத்தில் இயங்கும் கனடா- நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பின் 25வது ஆண்டு விழா ஒக்டோபர் 16ம் திகதி நடைபெறுகிறது என்ற விளம்பரம் உள்ளே பிரசுரமாகியுள்ளது.

**10865 Bayview Avenue** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள றிச்மென்ட்ஹில் இந்து ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த ஆண்டு விழாவில் நாதஸ்வர தவில் இசை மற்றும் வாத்திய இசைக் கருவிகளில் வாசித்தல் அத்துடன் தமிழிசைப் பாடல்கள் ஆகிய நிகழ்ச்சிகள இடம்பெறவுள்ளன. மேலதிக விபரங்களுக்கு விளம்பரத்தைப் பார்க்கவும்.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
RE/MAX
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### வேலை வாய்ப்பு

**McCowan//Lawrence** பகுதியில் வசிக்கும் 4 வயதுடைய பள்ளிச் சிறுவனை காரில் **school drop off and pick up** செய்ய, முன் அனுபவம் உள்ள பெண் வாகனத்துடன் தேவை.

**தொடர்புகளுக்கு:**
(647) 572-2345

### குழந்தை பராமரிப்பாளர் (BABY SITTER) தேவை

ஈற்றோபிக்கோ நகரில் உள்ள வீடொன்றில் 1 வயதுடைய ஆண் குழந்தையை வாரத்தின் 4-5 நாட்கள் வீட்டிலேயே தங்கியிருந்து பராமரிக்க பெண் ஒருவர் தேவை. அனுபவம் விரும்பத்தக்கது.
சம்பளம் - $18/hr
தொடர்புகளுக்கு:- 416 844 4207
அல்லது 416 510 8727

### வேலைக்கு ஆட்கள் தேவை

Markham நகரில் Woodbine & 14th Ave. சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள உணவகத்திற்கு kitchen helper மற்றும் dish washer, part-time line cook & South Indian cooks உடனடியாக தேவை. Female cook also needed.

Call Amar:
(416) 988-9518

### வேலைக்கு ஆட்கள் தேவை

**Downtown Toronto** ல் **John and Adelaide** சந்திப்பில் அமைந்துள்ள **Fox on John Restaurant க்கு Line cooks உடனடியாக தேவை.**
**$20/hr + Tips**
**Full Time.**
**Parking Available.**
**தொடர்புகளுக்கு:**
**647-494-5592**

### வேலை வாய்ப்பு


**Bathurst and Hwy 7** பகுதியில்
மாலை நேரம் 3-11
(7 நாட்களும்)
இரவு 11-7 **midnight**
வேலைகளுக்கு ஆடகள் தேவை.
**தொடர்புகளுக்கு:**
**சங்கர் 416-305-0264**

### Renovation Workers Wanted

**Workers needed for the following jobs:**

- **Drywall Installation**
- **Painting**
- **Hardwood Installation**
- **Bathroom Reno**
- **Kitchen Reno**

**Call - Siva 416-706-8160**






Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# தாயகத்தையும் தமிழகத்தையும் நோக்கிய உறுதியான பார்வையோடு தொடர்ச்சியாகப் பயணிக்கும் 'கனடா உதயன்'

எமது தமிழ் மொழியினது மூச்சுக் காற்று தோற்றம் பெறும் எமது தாயகத்தையும் தமிழகத்தையும் நோக்கிய வண்ணமே உலகெங்கும் பரந்து வாழும் எமது உறவுகள் உள்ளார்கள் என்பதை உறுதியாக நம்பும் நிலையில் நாம் இருக்க வேண்டும்.

அவ்வாறான ஒரு சிந்தனை எம்மிடத்தில் எப்போதும் படிந்திருந்தால்தான் நாம் தாய் மண் என்று கருதுகின்ற அந்த தவிர்க்க முடியாத நிலம் நிமிர்ந்து நிற்கக் கூடியதாய் தூணாக நாம் இருக்கலாம்.
எமது தாயகத்தை தனித்துவம் நிறைந்த ஒரு தனித்தேசமாக நிறுவிட எமது இனம் கொட்டிய செல்வங்கள் எத்தனையோ. ஆனாலும் நாம் சோர்ந்து விடாமல் எமது பணிகளை ஆற்ற வேண்டும் என்பதை மனதிற் கொள்ள வேண்டும்.
எமது தாயகத்திலிருந்து தமிழ் நாட்டுக்குச் சென்ற எமது உறவுகளுக்கு அங்கு வசதியான வாழ்க்கை கிட்டவில்லை. எனவே அவர்கள் தடுமாறிப் போய்விட்டார்கள்.

நாடு இழந்து, வீடு இழந்து, மண்ணையும், மக்களையும், ஊரையும், உறவுகளையும், உடைமைகளையும் இழந்து நிம்மதியாக உயிர்வாழ இந்தப் பூமிப் பந்தில் ஓர் இடம் கிடைத்திடாதா என்ற எதிர்பார்ப்புகளுடன், இன்னொரு தாய் நிலமான தமிழ்நாட்டிற்கு நம்பக்கைளை சுமந்து சென்ற ஈழச்சொந்தங்கள், முகாம்கள் என்ற பெயரில் சிறையைவிடக் கொடுமையான எவ்வித அடிப்படை வசதியுமற்ற வதைக்கூடங்களில் ஒரு தலைமுறைக்கும் மேலாக வாடிவருகின்றனர். இதனை செந்தமிழன் சீமான் நன்கு தெளிவு படுத்தி வருகின்றார், தனது அரசியல் பயணத்திலே. தமிழ்நாட்டில் கண்ணுக்கு புலப்படும் அனைத்தையும் விமர்சனப் பார்வையோடு படைப்பது பலரால் முடியாத ஒன்றாக இருக்க வேண்டும்.

இவ்வாறான நேரத்தில் எமது கனடா உதயன் சர்வதேச விருது விழாவிற்கு தாயகத்திலிருந்தும் தமிழகத்திலிருந்தும் மூவர் கௌரவிக்கப்பெறுகின்றனர்.அவர்கள் அவர்களை வாழ்த்துகின்றோம்.
விருதுகள் கொடுக்கப்பட வேண்டுமே தவிர விருதுகள் வாங்கப்பெறக் கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம் என்பதை அவர்கள் எப்போது புரிந்து நடக்க வேண்டும்.

MANIPAY HINDU COLLEGE - MANIPAY LADIES COLLEGE
OLD STUDENTS ASSOCIATION - CANADA (ESTD 1991)
மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா (ஸ்தாபிதம் 1991)

Date: Oct 05, 2022

**மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா - ஆண்டுப் பொதுக்கூட்டம் 2022**

சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர் வரும் October 23, 2022 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு இல. 2500 Birchmount Rd. Scarborough ல் அமைந்துள்ள Stephen Leacock Community Recreation Centre, Mainfloor Activity room ல் நடைபெறும். மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவ மாணவிகள் அனைவரையும் இப்பொதுக்கூட்டத்தில் பங்குபற்றி அவர்களது அங்கத்துவத்தைப் பதிவு செய்யுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புகட்கு:
ச. வசந்தராஜன், சி.கணேசலிங்கம் சி. விஜயகுமார்
தலைவர் (416)289-009 உபதலைவர் (416)499-6248 பொருளாளர் (647)293-9924

# வேலூரில் ஈழச்சொந்தங்களுக்கான குடியிருப்புகள் தரமற்றதாகக் கட்டப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்!



## சீமான் அறிக்கை:

---------------------------

வேலூர் மேல்மொனவூரில் ஈழச்சொந்தங்களுக்கான குடியிருப்புகள் தரமற்றதாகக் கட்டப்படுவதைத் தடுத்து நிறுத்தி, உறுதிமிக்கத் தரமான வீடுகளாக தமிழ்நாடு அரசு கட்டித்தர வேண்டும்! –
சீமான் வலியுறுத்தல் '

மேற்படி விடயம் தொடர்பாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, வேலூர் மாவட்டம், மேல்மொனவூரில் தொப்புள்கொடி உறவுகளான ஈழத்தமிழர்கள் மறுவாழ்வு மையத்தில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகள் சிறிதும் தரமற்றதாக இருப்பது அதிர்ச்சியையும், கடும் ஆத்திரத்தையும் ஏற்படுத்துகிறது. நம்பிக்கையோடு நம்மை நாடி வந்த நம் இரத்தச் சொந்தங்கள் என்ற உணர்வு அணுவளவுமின்றி, வாழ வழியற்று வந்த அகதிகள்தானே என்ற அலட்சிய மனப்பான்மையே, தரமற்ற வீடுகளைக் கட்ட அனுமதித்ததற்கு முக்கியக் காரணமாகும். ஆடு, மாடுகளை அடைக்கும் பட்டிகளைவிட மிக மோசமான முறையில் குடியிருப்புகள் கட்டப்படுவதைக் கைகட்டி வேடிக்கை பார்க்கும் தமிழ்நாடு அரசின் சிறிதும் மனச்சான்றற்ற கொடும்போக்கு வன்மையான கண்டனத்திற்குரியது.
மேல்மொனவூர் ஈழத்தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் ஈழச்சொந்தங்களுக்காக 'முதலமைச்சர் இலவசத் தொகுப்பு வீடுகள்' என்ற பெயரில் ரூ.11 கோடி ரூபாய் செலவில் 220 வீடுகள் கட்டும் திட்டத்தினை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். ஆனால், வீடுகள் கட்டுவதற்கான ஒப்பந்தத்தைப் பெற்ற கட்டுமான நிறுவனங்கள் வீடுகளை முற்றிலும் தரமற்ற முறையில் கட்டி வருவதாக முகாம்களில் வசிக்கும் மக்களே குற்றஞ்சாட்டினர். இதையடுத்து நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர்கள் கட்டுமானம் நடைபெறும் இடத்திற்கே நேரடியாகச் சென்று மேற்கொண்ட கள ஆய்வில், அடித்தளம் ஆழமாக அமைக்கப்படாததும், சிமெண்ட் கலவையில் அதிகளவு மலைமணல் கலக்கப்படுவதும், கான்கிரீட் தூண்கள் ஏதுமின்றிப் பாதுகாப்பற்ற வகையில் வீடுகள் கட்டப்படுகின்றன என்ற அதிர்ச்சியளிக்கும் உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்தன.
இது குறித்துத் தொடர்புடைய ஒப்பந்ததாரர்களிடம் நாம் தமிழர் கட்சியினர் எழுப்பிய கேள்விகளுக்கு உரிய விளக்கமளிக்காமல், தங்களது செல்வாக்கைப் பயன்படுத்தி, காவல்துறையினர் மூலம் கட்டுமான முறைகேடுகளை அம்பலப்படுத்திய நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர்களையே கைது செய்தது எதேச்சதிகாரபோக்கின் உச்சமாகும். முதலமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்டுத் தொடங்கப்பட்ட திட்டத்திலேயே ஊழல் புரியுமளவுக்கு மிகப்பெரிய மோசடியில் ஈடுபட்டுள்ள கட்டுமான நிறுவனங்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், அவர்களின் முறைகேடுகளுக்குத் துணைபோகும் திமுக அரசின் செயல், கட்டுமான ஊழலில் ஆளுங்கட்சியினருக்கும் தொடர்பு இருக்குமோ என்ற ஐயத்தை ஈழத்தமிழ் சொந்தங்களிடம் ஏற்படுத்தியுள்ளது.
நாடு இழந்து, வீடு இழந்து, மண்ணையும், மக்களையும், ஊரையும், உறவுகளையும், உடைமைகளையும் இழந்து நிம்மதியாக உயிர்வாழ இந்தப் பூமிப் பந்தில் ஓர் இடம் கிடைத்திடாதா என்ற எதிர்பார்ப்புகளுடன், இன்னொரு தாய் நிலமான தமிழ்நாட்டிற்கு நம்மை நம்பி வந்த ஈழச்சொந்தங்கள், முகாம்கள் என்ற பெயரில் சிறையைவிடக் கொடுமையான எவ்வித அடிப்படை வசதியுமற்ற வதைக்கூடங்களில் ஒரு தலைமுறைக்கும் மேலாக வாடிவருகின்றனர். இந்த நாட்டிற்குச் சிறிதும் தொடர்பில்லாத திபெத்தியர்களுக்கு வளமான வாழ்வை இந்தியப் பெருநாடு அமைத்துக் கொடுத்துள்ளது. தமிழர்களுக்குச் சிறிதும் தொடர்பில்லாத ஐரோப்பிய நாடுகள்கூட ஈழத் தமிழ்ச்சொந்தங்களைத் தங்கள் சொந்த நாட்டுக் குடிமக்களைப்போல அரவணைத்து, ஆதரித்து வாழ வைக்கின்றன. ஆனால் தாய்த்தமிழகத்தைத் தங்கள் சொந்த வீடென நம்பி வந்த உறவுகளுக்கு, இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாடு அரசு கட்டித் தரப்போவதாகக் கூறிய குடியிருப்புகளில் கூட ஊழல் புரிவதென்பது வெட்கக்கேடானதாகும்.
ஆகவே, மேல்மொனவூரில் ஈழச்சொந்தங்களுக்குப் புதிதாகக் கட்டப்படும் குடியிருப்புகள் தரமற்றதாகக் கட்டப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்தி, உறுதிமிக்கத் தரமான வீடுகள் கட்டப்படுவதை உறுதிசெய்ய வேண்டுமென வலியுறுத்துகிறேன். மேலும், முறைகேடுகளில் ஈடுபட்ட கட்டுமான நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்து, ஒப்பந்ததாரர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாக தமிழ்நாடு அரசினைக் கேட்டுக்கொள்கிறேன்.
இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# முல்லைத்தீவு மாவட்ட தொழிற்துறையினருடனான கலந்துரையாடல்!

வடமாகாண ஆளுநர் செயலகத்தின் ஏற்பாட்டில் சமூக மட்ட அமைப்புக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலானது மாவட்ட செயலகங்கள் தோறும் நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்ட தொழிற்துறைசார் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலானது வியாழக்கிழமை (06) காலை 11.00 மணிக்கு மாவட்ட செயலக பேரவை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் முல்லை கைத்தொழில் போரவையின் அங்கத்தவர்கள் கலந்துகொண்டு தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக வடமாகாண ஆளுநரின் பொதுசன தொடர்பு அதிகாரி ரி.கணேசநாதனுக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

குறிப்பாக சந்தை வாய்ப்புக்களுக்கான தளத்தினை ஏற்படுத்திக்கொடுத்தல், பொது அமைப்புக்களுக்கு வழங்கப்பட்ட பவனையற்றஉபகரண தொகுதிகளை பயன்பாட்டுக்குரியதாக மாற்றுகின்ற நடவடிக்கைகள், பொதுவான ஓரிடத்தில் தொழிற்கூடத்தினை அமைப்பதன் அவசியம், தமது உள்ளூர் உற்பத்திகளை மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு விற்பனை செய்வதற்கான தொடர்புகளை ஏற்படுத்தல், தமது உற்பத்திகளை பிற மாகாணங்களுக்கு கொண்டுசெல்வதால் பல சவால்களை எதிர்கொள்வதால் மாகாணத்திற்குள் விற்பனை செய்வதற்கான பொறிமுறையினை ஏற்படுத்தல் தொடர்பான விடயங்களை தெரியப்படுத்தி கலந்துரையாடியிருந்தனர்.

மேலும் வெளி நாடுகளுக்கு தமது ஏற்றுமதி செய்யும்போது ஆய்வு கூட வசதிகள் இன்மையால் பல சவால்களை எதிர்கொள்வதால், மாகாணத்திற்கென ஒரு ஆய்வு கூடத்தினை உருவாக்குவதன் அவசியத்தை சுட்டிக்காட்டியிருந்தனர்.





கடந்த மாதங்களில் நாட்டில் பொருளாதார எரிபொருள் பிரச்சினைகள் உச்சளவில் இருந்த போதும், தமக்கு தொழில் தடைப்படாதவகையில் எரிபொருளினை வழங்கிய மாவட்ட செயலக நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்தனர்.



இதன்போது கருத்துத்தெரிவித்த வடமாகாண ஆளுநரின் பொதுசன தொடர்பு அதிகாரி ரி. கணேசநாதன்: குறித்த பிரச்சினைகள் தொடர்பாக கௌரவ வடமாகாண ஆளுநருக்கு தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தம்மால் மேற்கொள்ளப்பட்டும் என உறுதியளித்தார்.

மேலும் மாவட்ட பிரச்சினைகளை எழுத்து மூலமாக அனுப்பி வைக்குமாறும், ஆளுநரை நேரடியாக சந்தித்து கலந்துரையாடுவதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்திருந்தார்.

இக் கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநரின் பொதுசன தொடர்பு அதிகாரி ரி. கணேசநாதன் மற்றும் முல்கோ நிறுவன பணிப்பாளரும் முல்லை கைத்தொழில் போரவையின் தலைவருமான எஸ். தவசீலன் ஆகியோர் இணையவழி செயலி ஊடாகவும், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் (காணி) எஸ். குணபாலன், மாவட்ட செயலக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் யோ.மதுசூதன், மாவட்ட செயலக தொழில்துறை திணைக்கள மாவட்ட இணைப்பாளர் ரி. நிரோசன், தொழில்துறை திணைக்கள உத்தியோகத்தர்கள், முல்லை கைத்தொழில் போரவையின் பிரதிநிதிகள், பல்வேறுபட்ட கைத்தொழில் நிறுவன உரிமையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**
**ஊடகவியலாளர், முல்லைத்தீவு**

# வடக்கு – கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 70 வது நாள் கவனயீர்ப்பு






வடக்கு-கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 70 வது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (9) காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட முழங்காவில் கிராமத்தில் இடம்பெற்றது.

குறித்த 100 நாள் செயல் முனைவின் 70ம் நாள் போராட்டத்தில் முழங்காவில் உள்ள பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" "நாங்கள் நாட்டை துண்டாட வோ தனியரசோ கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம்".

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் "13வது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்க துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்" எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம், எமது மத தளங்களின் புனிதத்தை கொச்சைப்படுத்தாதே, இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு சுபீகரிக்காதே என பல கோரிக்கைகளை முன் வைத்தனர். **- மன்னார் நிருபர்**

# இலங்கை வவுனியாவில் அரிய வகை உயிரினம்




வவுனியா - ஓமந்தை, அரச வீட்டுத் திட்ட பகுதியில் இலங்கைக்கே உரித்தான அரிய வகை அரணை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஓமந்தை அரச வீட்டுத் திட்டப் பகுதியில் உள்ள தொழிற்சாலை ஒன்றுக்கு சென்ற ஒருவர், தாசியா ஹாலியானஸ் என்ற இலங்கைக்கே உரித்தான அரியவகை அரணை இனம் ஒன்றை அவதானித்த நிலையில் அதனை புகைப்படம் எடுத்துள்ளார்.



இலங்கைக்கு மட்டுமே உரித்தான தாசியா ஹாலியானஸ் எனும் உயிரியல் பெயருள்ள இந்த தனித்துவ அரணை இனம் வன்னிக் காடுகளில் இருந்து வந்துள்ள போதும், மிக அரிய வகை உயிரினமாகவே உள்ளது. பெரும்பாலும் மரங்களில் இவ் உயிரினம் வாழ்ந்து வருகின்றது.

நாட்டின் ஒரு அரியவகை உயிரினமாக இது இருப்பதானால் 1970 ஆம் ஆண்டுகளில் வெளி வந்த இலங்கையின் இரண்டு ரூபாய் நாணயத்தாளில் இதன் படம் அரசாங்கத்தால் பொறிக்கப்பட்டு இருந்ததுடன், முத்திரை ஒன்றிலும் இதன் படம் பொறிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதிக் காலப்பகுதியில் ஓமந்தைக் காட்டுப் பகுதியில் இதே போன்ற அரணை இனம் ஒன்று அவதானிக்கப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இராணுவத்தினரிடம் இருந்து எமது காணிகளை மீட்பதற்கு உதவி புரியுங்கள்

## 35 வருடங்களாக அகதிகள் முகாமில் வசிக்கும் யாழ்ப்பாணம் பொலிகண்டி மக்கள் கோரிக்கை

இராணுவத்தினரிடம் இருந்து எமது காணிகளை மீட்பதற்கு உதவி புரியுங்கள் என 35 வருடங்களாக அகதிகள் முகாமில் வசிக்கும் யாழ்ப்பாணம் பொலிகண்டி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் மெசிடோ நிறுவனத்தால் யாழ் பருத்தித்துறை பொலிகண்டி நலன்புரி நிலையங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை (8) மதியம் இடம் பெற்றது.

இலங்கையில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக பலாலிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கடந்த 35 வருடங்களுக்கு மேலாக யாழ் பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பொலிகண்டி கிராம சேவையாளர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சின்னவலை, பாலாவி, நிலவன், ஆகிய முகாமில் வசிக்கும் வருமானத்தை இழந்த 75 குடும்பங்களுக்கான உலருணவுப் பொருட்கள் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிராடோ அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது. இதன் போதே அந்த மக்கள் குறித்த கோரிக்கையை முன் வைத்தனர்.



அவர்கள் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் காரணமாக பலாலிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வந்த நாங்கள் இங்கு தனியார் காணிகளில் தங்க வைக்கப் பட்டுள்ளோம்.

காணி உரிமையாளர்கள் தங்களது காணிகளை விட்டு விலகுமாறு வற்புறுத்துகிறார்கள். எங்களது சொந்தக் காணிகளை இலங்கை இராணுவம் ஆக்கிரமித்து பலன் தரும் மரக்கன்றுகளை உருவாக்கி அனுபவித்து வருகின்றார்கள்.





ஆனால் நாங்கள் அனாதைகளாக ஓலைக் குடிசைகளில் மழை வெள்ளத்திற்குள் சுகாதார சீர்கேடுகள் உடன் வாழ்ந்து வருகிறோம்.

எனவே இலங்கை ஜனாதிபதி அவர்கள் தலையிட்டு இராணுவத்தினரிடம் இருந்து எமது காணிகளை மீட்டு எமது மீள் குடியேற்றத்துக்கு உதவி செய்ய வேண்டும் என பொலிகண்டி அகதிகள் முகாமில் வசிக்கும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**- மன்னார் நிருபர்**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கிளிநொச்சி மாவட்டத்தில் 7 வது பொலீஸ் நிலையம் திறந்துவைப்ப!

பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க இதுவரைகாலம் பொலீஸ் காவலரனாக செயற்பட்டு வந்த கிளிநொச்சி இராமநாதபுரம் பொலீஸ் காவலரன் பொலீஸ் நிலையமாக மாற்றப்பட்டு செயற்பட தொடங்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் 7வது பொலீஸ் நிலையமாகவும் வடமாகாணத்தில் 61 வது பொலீஸ் நிலையமாகவும் இது அமைந்துள்ளது.







பொலீஸ்மா அதிபர் திரு. C.D விக்கிரமரத்ன அவர்களின் வழிகாட்டலின் பேரில் கிளிநொச்சி பொலீஸ் சிடேஸ்ர அத்தியச்சகர் திரு. M.K.R.A குணரத்ன அவர்களில் அழைப்பின் பேரில் கிளிநொச்சி மாவட்ட பொலீஸ் அத்தியச்சகர் திரு. H. சமுத்திர ஜீவன் அவர்களின் பங்களிப்புடன் வடமாகாண சிரேஸ்ட பொலீஸ்மா அதிபர் திரு. பிரியந்த வீரசூரிய அவர்களினால் இன்றையதினம் திறந்துவைக்கப்பட்டது.

இன் நிகழ்வில் கிராமசேவையாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# இலங்கைக்கு பலத்த அடி! ஜெனிவா தீர்மானத்தால் மீண்டும் ஐ.நா காழ்ப்பு

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் இலங்கைக்கு பாரிய பிரச்சினை உருவாகியுள்ளதாகவும், சர்வதேசத்தை வென்றதாக கூறிக்கொள்ளும் இலங்கை அரசாங்கத்திற்கு இது பலத்த அடியாகும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். அத்துடன், வாக்களிப்பில் இருந்து விலகிய நாடுகளை வெற்றிகொள்ளும் வேலைத்திட்டமொன்று அரசாங்கத்திடம் இருக்கவில்லையெனவும் நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போது சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர், "ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது ஒரு நாடு என்ற வகையில் பாரிய பிரச்சினையாகும். சர்வதேசத்தை வென்றதாகக் கூறிக்கொள்ளும் அரசாங்கத்திற்கு இது பலத்த அடியாகும். வரலாற்றில் முதல் தடவையாக பொருளாதார குற்றங்கள் தொடர்பான பிரேரணை மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பில் இருந்து விலகிய நாடுகளை வெற்றிகொள்ளும் வேலைத்திட்டமொன்று அரசாங்கத்திடம் இருக்கவில்லை. உலக நாடுகளுடன் சர்வதேச ரீதியாக கையாளக்கூடிய முறையான திட்டமிடலுடன் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். பொருளாதார நடவடிக்கைகளை குறுகிய சட்டங்களுக்குள் சுருக்கி தற்போதுள்ள பிரச்சினையிலிருந்து மீள முடியாது. மாறாக, நவீனமயமாக்கப்பட்ட உகந்த திட்டம் உருவாக்கப்பட வேண்டும்" என்றார். இதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னணியில் சிறிலங்காவின் கடும்போக்கு அரசியல்வாதிகள் மீண்டும் தமது காழ்ப்பு கருத்துக்களை வெளியிட ஆரம்பித்துள்ளனர்.



சிறிலங்கா படையினரை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்புவதற்கு ஒப்பான நகர்வுகளை மேற்குலகம் செய்வதான கண்டனங்களும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இங்கிரிய விபத்தில் இளைஞர் பலி; இருவர் படுகாயம்



விருந்து ஒன்றுக்குச் சென்று விட்டு வந்து கொண்டிருந்த மூன்று இளைஞர்களுடன் வந்த கார் ஒன்று இங்கிரிய நம்பபான பிரதேசத்திலுள்ள வடிகால் குழாயில் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளதாக இங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் நாச்சி மலை, இங்கிரிய, மஹா இங்கிரிய பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய சுரவீர ஆராச்சிகே முதுமால கலநஜித் என்ற இளைஞர் அவர்.

மூன்று இளைஞர்களை ஏற்றிய கார் இங்கிரியவில் இருந்து இரத்தினபுரி நோக்கி அதி வேகமாக பயணித்த போது, நம்பப்பன பகுதியில் கார் கட்டுப்பாட்டை இழந்து வடிகான் குழாயில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் காரின் முன் இடது ஆசனத்தில் அமர்ந்திருந்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சாரதியாக இருந்த இளைஞன் ஹொரணை ஆதார வைத்தியசாலையிலும், பின்னால் பயணித்த இளைஞன் பலத்த காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இங்கிரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,

Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

கனடிய செய்திகள் Canadian News

# தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் வே. சங்கரநாராயணன் எழுதிய "பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்" வெளியீட்டு விழா 21ம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெறுகின்றது





எதிர்வரும் 21-10-2022 சனிக்கிழமையன்று ஸ்காபுறோவில் அமைந்துள்ள கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபத்தில் கனடா தொடர்பான பயண நூல் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

"பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்" நூலை எழுதிய தமிழ்நாட்டைச் சேர்ந்த சேலம் வாழ் பேராசிரியர் வே. சங்கரநாராயணன் அவர்கள் தற்போது கனடா வந்துள்ளார்.

இந்த நூல் வெளியீட்டு விழா தொடர்பான அழைப்பிதழை இன்று மூன்று நண்பர்களிடம் சேலம் வாழ் பேராசிரியர் வே. சங்கரநாராயணன் அவர்கள் நேரடியாக கையளித்தார்.

இடமிருந்து வலமாக "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன். கணக்காளர் குமார் தம்பியப்பா மற்றும் காப்புறுதி முகவரும் வீடு விற்பனை முகவருமான கென் கிருபா ஆகியோர் பெற்றுக்கொள்வதைக் காணலாம்.

மேலும் எதிர்வரும் 15ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள கனடா உதயன் சர்வதேச விருது விழாவில் பேராசிரியர் வே. சங்கரநாராயணன் அவர்களுக்கு "உதயன் வாழ்நாள் சாதனையாளர் விருது - தமிழ்நாடு - 2022" வழங்கப்படவுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது

# எதிர்வரும் 15– 10– 2022 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும் உதயன் சர்வதேச விருது விழாவில் இலங்கையர்களுக்கான சிறப்பு விருது பெறும் பிரமுகர் நிரோஷ் தியாகராஜா

**முன்னாள் ஊடகவியலாளரான இவர் தற்போது யாழ் மாவட்டத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்.**

---

**இலங்கை அரசின் தொல்லியல் திணைக்களத்தினர் வலிகாமம் கிழக்கில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட போது அதற்கு எதிராக குரல் கொடுத்த படியால் தற்போது நீதி மன்றங்களில் பல வழக்குகளை எதிர்கொண்டு வருகின்றார்.**



திரு. தியாகராஜா நிரோஷ் யாழ்ப்பாணத்தில் 1985 யூன் 02 திகதி பிறந்தார். இவரின் பாடசாலைக் கல்விக் காலம் என்பது யுத்த இடம்பெயர்வுகள மிகுந்ததாகக் காணப்பட்ட நிலையில் குறித்த வயதுகளில் பரீட்சைகளை எழுதுவதற்கு மட்டுமே இவருக்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. வன்னியில் மல்லாவி மத்திய கல்லூரியில் சாதாரன தர பரீட்சையினையும் உயர்தர பரீட்சையினை சமாதான காலப்பகுதியில் யாழ் மத்திய கல்லூரியிலும் தோற்றியுள்ளார்.

உயர்தரம் கல்வி கற்கும் காலத்தில் யாழில் இயங்கிய நமது ஈழநாடு பத்திரிகையில் செய்தியாளராகப் பணியாற்றினார். ஆதனைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஊடகக் கற்கையில் இணைந்து ஊடகத்துறையில் கல்வி கற்ற போதும் மாணவர் ஒன்றிய செயற்பாடுகளில் ஈடுபாட்டை செலுத்தியதன் காரணமாகவும் ஊடக மாணவர் அமையத்தினை தலைவராகவும் இதர வகையில் மாணவர் உரிமை சார்செயற்பாடுகளில் குரல் கொடுத்தமை நிமிர்த்தம் தொடர்ந்தும் கல்வி கற்க முடியாத சூழ்நிலையில் கொழும்பிற்கு இடம்பெயர்ந்தார்.

இவரின் பல்கலைக்கழக கல்வி ஆர்வம் ஊடகத்துறை, மனித உரிமை துறைசார்ந்தும் அமைந்துள்ளது. தற்போது இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்தின் மனித உரிமைகள் கற்கை நிறுவனத்தில் பட்டப்பின் படிப்பு பட்டத்தினை பெற்றுள்ளார். மேலும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் மற்றும் பல்கலாச்சார கற்கையில் முதுகலைமாணி பட்டத்தினை சம காலத்தில் மேற்கொண்டு வருகின்றார்.

மேலும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் மனித உரிமைகள் கற்கை நிறுவனத்தில் மனித உரிமைகள் மற்றும் சமாதானக் கற்கை டிப்ளோமாவினையும் கலைபீடத்தில் ஊடகத்துறை டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். மேலும் நேர்வேஜிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் அனுசரணையில் இலத்திரனியல் ஊடகத்தறையிலும் உயர் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

ஊடகத்தறையில் பணியாற்றும் காலப்பகுதியில் இலங்கை இதழியல் கல்லூரியில் குற்றம் மற்றும் நீதித்துறை அறிக்கையிடல், போருக்குப் பின்னரான முரண்பாட்டு நிலை அறிக்கையிடல், முரண்பாடுகளை சமாதான முயற்சிகளுக்குக் கையளுதல் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அறிக்கையிடல், போருக்குப் பின்னரான சமாதனம் மற்றும் அபிவிருத்தி, தெற்காசிய ஊடகவியலாளர் கட்டமைப்பின் போருக்குப் பின் மீண்டழுதலும் சட்டமும் போன்ற துறைகளிலும் குறுங்காலப் பயிற்சிகளை சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக பெற்றுள்ளார். சர்வதேசத்தில் ஊழலுக்கு எதிராகச் செயற்படும் டிரான்பேரன்சி நிறுவனத்தின் புலனாய்வு ஊடக பயிற்றுவிப்பாளர் பயிற்சியினைப் பெற்றதுடன் பின்னர் அந் நிறுவனத்தில் ஊடகவியலாளர்களுக்கான புலனாய்வு ஊடக பயிற்றுவிப்பாளராகவும் பணியாற்றினார். இப் பயிற்சி ஆட்சியாளர்களை மனித உரிமை ரீதியில் காட்டிக் கொடுக்கும் திட்டமாக கருதப்பட்டு இலங்கையில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டு தடைசெய்யப்பட்டது. மேலும் இவர் பாராளுமன்றத் தேர்தல் (2010) ஜனாதிபதித் தேர்தல் (2015) போன்றவற்றில் உள்நாட்டு காணிப்பளராகவும் பணியாற்றியுள்ளார்.

கொழும்பில் தினக்குரல் பத்திரிகையில் தினக்குரல் வார வெளியீட்டில் யதார்த்தன் என்ற புனை பெயரில் யுத்தத்தின் பின்னராக இடம்பெயர்ந்த மக்களின் மீதன மனித உரிமை மீறல்கள் தொடர்பில் வாராவாரம் சமகால அரசியல் கட்டுரைகளை இவர் எழுதினார். அத்துடன் தினக்குரல் வாரவெளியீட்டில் உதவி ஆசிரியராக பணியாற்றினார். அக் காலப்பகுதியில் வராவாரம் அசியல் தலைவர்களை நேர்காணலுக்கு உட்படுத்தியும் வந்துள்ளார். 2012 ஆம் ஆண்டிலிருந்து வாராந்தம் வீரகேசரி வாரவெளியீட்டில் அரசியல் கட்டுரைகளையும் மனித உரிமை ரீதியிலான நேர்காணல்களையும் சுதந்திர ஊடகவியலாளராக மேற்கொண்டுள்ளார்.

இக்காலப்பகுதியில் கொழும்பில் தமிழ் மக்கள் பல்வேறுபட்ட இடர்பாடுகளை எதிர்கொண்டிருந்த போது ஜனநாயக மக்கள் முன்னணி சார்பாக சிவில் அமைப்பக்களின் கோரிக்கைக்கு அமைய இவர் ஜனநாயக மக்கள் முன்னணி ஊடாக தேர்தலில் போட்டியிட்டார். கொழும்பு மாநகர சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். பின்னர் சில காலங்களில் சுய விருப்பில்



அப் பதவியில் இருந்து இராஜிநாமாச் செய்ததுடன் வடக்கு மனித உரிமைகள் நிலையம் என்ற மனித உரிமைகள் நிறுவனத்தினைத் தோற்றுவித்து அதன் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றினார். அந் நிறுவனம் வட பகுதியில் இராணுவமயமாக்கத்திற்கு எதிராகவும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விடயத்திலும் பல்வேறுபட்ட சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக இலங்கையில் இடம்பெற்ற உள்ளராட்சி மன்றத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக தேர்தலில் போட்டியிட்டு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் (உள்ளராட்சி மன்றம) தவிசாளராகக் கடந்த 4 வருடங்களாக சேவையாற்றி வருகின்றார். யாழ். மாவட்டத்தில் உள்ள அதிக சனத்தொகையினையும் (74 ஆயிரம்) அதுபோன்று அதிக நிலப்பரப்பினையும் கொண்ட (104 சதுரக் கிலோமீற்றர்) உள்ளூர் ஆட்சி மன்றத்தின் தவிசாரளாக சேவையாற்றகின்றார். தமிழர் தாயகத்தில் அபிவிருத்தியிலும் அதேசமயம் உள்ளராட்சி மன்ற அதிகாரத்தினை நிலைநாட்டுவதிலும் இவர் தலைமைதாங்கும் பிரதேச சபை முன்மாதிரியாகவுள்ளது. ஏற்கனவே மத்திய அரசாங்கத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தொல்லியல் திணைக்களம் போன்ற மத்திய அரசாங்கத்தின் நிறுவனங்கள் தமிழ் மக்கள் சார்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை மீறிய சந்தர்ப்பங்களில் இவரின் தலையீடு காரணமாக இவருக்கு நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. நிலாவரையில் பௌத்த ஆக்கிரமிப்பிற்கு எதிராக முன்னின்று செயற்பட்டமையினால் அதிக சவால்களை எதிர்கொண்டமை தெரிந்ததே.

மேலும் தமிழ் மக்களின் நினைவேந்தல் உள்ளிட்ட அடிப்படை மற்றும் மனித உரிமைகளை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்காக துணிந்து காத்திரமாக செயற்பட்டமையின் விளைவாக பல வழக்குகள் இலங்கையில் இவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக இவரின் சேவையினை கௌரவித்து கனடா உதயன் பத்திரிகையானது இவருக்கு விருதளிக்கின்றது.

# தம்மைத் தாமே காண வந்த "பொன்னியின் செல்வர்கள்"



தற்போது உலகெங்கும் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட திரையரங்குகளில் வெளியாகி பெரும் வெற்றி பெற்றுள்ள பொன்னியின் செல்வன் படம், தமிழ் ரசிகர்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளது. தஞ்சை மாவட்டம் கும்பகோணம் திரையரங்கு ஒன்றில் படம் பார்க்க வந்த ரசிகர்கள் சிலர், பொன்னியின் செல்வன் கதாபாத்திரங்கள் போலவே உடையணிந்து வந்து அசத்தினர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஓய்வுபெற்ற வடாகாண முன்னை நாள் பிரதம செயலாளர் அ. பத்தி நாதனுக்கு சேவை நலன் பாராட்டு

ஓய்வுபெற்ற வடமாகாண முன்னை நாள் பிரதம செயலாளர் அ. பத்திநாதன் அவர்களுக்கு சேவை நலன் பாராட்டு விழா ஞாயிற்றுக்கிழமை (9) மன்னார் மாதோட்டம் புலவர் கீர்த்தாம் பிள்ளை கலாமன்றத்தின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை (9) நானாட்டான் டிலாசால் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இதன் போது ஓய்வு பெற்ற முன்னை நாள் வடமாகாண பிரதம செயலாளர் அ. பத்திநாதன் அவர்களின் சேவை நலன் பாராட்டு நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மன்னார் மாதோட்டம் புலவர் கீர்த்தாம் பிள்ளை கலாமன்றத்தின் சிறப்பு நிகழ்ச்சியாக “பாதுகை” என்ற குறுங்கூத்து செழுங்கலை







வித்தகர் விமலநாதன் அவர்களின் எழுத்துருவாக்கத்தில் அண்ணாவியார் ச. ஆசைப்பிள்ளை (அதிபர்) அவர்களின் நெறியாள்கையில் கலைஞர்களால் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், பங்குத்தந்தை அருட்சகோதரர், கலைஞர்கள், மக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# பொத்துவில் பகுதியில் வடக்கு – கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 71 வது நாள் கவனயீர்ப்பு

வடக்கு-கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 71 வது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு திங்கட்கிழமை (10) காலை 10.30 மணியளவில் பொத்துவில் ஏத்தம் பகுதியில் இடம்பெற்றது.

குறித்த 100 நாள் செயல் முனைவின் 71ம் நாள் போராட்டத்தில் பொத்துவில் ஏத்தம் பகுதியில் உள்ள பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.



“வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்” நாங்கள் நாட்டை துண்டாட வோ தனியரசோ கேட்கவில்லை.

இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம். “வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்” “13வது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்க துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது.



பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்” எங்கள் நிலம் எமக்கு வேண்டும்,நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம், எமது மத தளங்களின் புனிதத்தை கொச்சைப்படுத்தாதே, இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு சுபீகரிக்காதே என பல கோரிக்கைகளை முன் வைத்தனர்.

**- மன்னார் நிருபர்**



# வன்னியில் நூலகமொன்றை அமைக்க மக்கள் நீதி மைய மாநில செயலாளர் ஸ்ரீதர் உறுதியளிப்பு

வன்னியில் பின்தங்கிய கிராமம் ஒன்றில் நூலகம் ஒன்றை அமைப்பதற்கும், ஆயிரம் நூல்களைப் பெற்றுத் தரவும் பத்மஸ்ரீ கமலஹாசன் ஊடாக நடவடிக்கை எடுப்பதாக இந்தியாவின் மக்கள் நீதி மைய மாநில பிரிவு செயலாளரும், சட்டத்தரணியுமான எம். ஸ்ரீதர் உறுதியளித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

பத்மஸ்ரீ கமல்ஹாசனின் மக்கள் நீதி மைய மாநில பிரிவு செயலாளரும், சட்டத்தரணியுமான எம். ஸ்ரீதருக்கும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் (ஈபிடிபி) வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபனுக்குமிடையில் கலந்துரையாடலொன்று வவுனியா, மன்னார் வீதியில் அமைந்துள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்தில் 09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

இதன்போது, யுத்தத்திற்கு பின்னரான வன்னியின் தற்போதைய நிலமைகள் மற்றும் வன்னி மக்களின் பொருளாதார, வாழ்வாதார நிலைமைகள் தொடர்பாக கேட்டறிந்த சட்டத்தரணி எம். ஸ்ரீதர், வன்னி மாவட்டத்தின் பின் தங்கிய கிராமம் ஒன்றில் நூலகம் அமைப்பதற்கும், அவ் நூலகத்திற்கு ஆயிரம் புத்தகங்களை வழங்குவதற்கும் பத்மஸ்ரீ கமல்ஹாசன் ஊடாக நடவடிக்கை எடுப்பதாக இதன்போது உறுதியளித்திருந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் தெரிவித்தார்.

அத்துடன், சமகால அரசியல் நிலை மற்றும் எதிர்கால அரசியல் நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது டன், ஈழத்தமிழர் விடயம் தொடர்பில் இலங்கை அரசியல்வாதிகள் மற்றும் தமிழக அரசியல்வாதிகள் கொண்டுள்ள நிலைப்பாடுகள் தொடர்பிலும் இதன்போது இருவரும் கலந்துரையாடிய தாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

# "மக்களின் சுதந்திர உரிமைகள் மீது கை வைக்காதே" - கொழும்பில் ஆர்ப்பாட்டம்

“மக்களின் சுதந்திர உரிமைகள் மீது கை வைக்காதே” என்ற தொனிப் பொருளில் கொழும்பு காலிமுகத்திடலில் திங்கட்கிழமை (10) அன்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை சட்டத்தரணிகள் மற்றும் தொழில் வல்லுனர்கள் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பு காலி முகத்திடலில் இடம்பெற்ற அமைதி ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் மிகவும் மூர்க்கத்தனமாக நடந்துகொண்டதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. ஆர்ப்பாட்டத்தை அடுத்து கொழும்பு காலி முகத்திடல் வீதி முற்றாக மூடப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு - காலி முகத்திடலில் ஞாயிற்றுக்கிழமை (9) மாலை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது அங்கு அமைதியற்ற நிலைமை ஏற்பட்டது. இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்து 5 பொதுமக்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த சில மாதங்களாக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் போது உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் நேற்றைய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இந் நிலையில், காலி முகத்திடலில் போராட்டக் களத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூறும் நிகழ்வில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் 16 வயது மாணவன் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், ஏனையவர்கள் தொடர்ந்தும் கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ எம்.பி வைத்தியசாலையில் அனுமதி



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகதாரலிங்கம் மாரடைப்பு காரணமாக புதன்கிழமை (11) யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாரடைப்பு காரணமாக திங்கட்கிழமை (10) மாலை புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தற்போது பாராளுமன்ற உறுப்பினரின் உடல் நிலை தேறி வருவதாகவும், வைத்தியரின் ஆலோசனைக்கு அமைவாக வைத்தியசாலையில் தங்கி இருந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிய வருகிறது.

**- மன்னார் நிருபர்**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வவுனியா, ஓமந்தை பகுதியில் மின்னல் தாக்கியதில் 11 மாடுகள் பலி

வவுனியா, ஓமந்தை பகுதியில் மின்னல் தாக்கத்தின் காரணமாக 11 மாடுகள் பலியாகியுள்ளன.

புதன்கிழமை (12) மாலை இடம்பெற்ற இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா, ஓமந்தை, அரச முறிப்பு பகுதியில் மாலை நேரம் மாடுகள் மேய்ச்சலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மழை பெய்துள்ளது.

இதன்போது, மாடுகள் மேய்ச்சலில் ஈடுபட்ட பகுதியில் உள்ள மரத்தின் மீது இடி மின்னல் தாக்கம் ஏற்பட்டு மாடுகளை தாக்கிய மையால் 11 மாடுகள் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளன.



இதேவேளை, வவுனியாவில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வரும் நிலையில் கடந்த 7 ஆம் திகதி இடி, மின்னல் தாக்கத்தினால் மாமடு பகுதியில் குடும்ப பெண் ஒருவர் மரணமடைந்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆட்சிக்கு வருகின்ற ஒவ்வொரு அரசாங்கமும் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றுவதற்காகவும் நீதியை பெற்றுத் தருவதற்காகவும் செயல்படவில்லை

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா



ஆட்சிக்கு வருகின்ற அனைத்து அரசாங்கமும் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றுவதற்காகவும் நீதியை பெற்றுத் தருவதற்காகவும் செயல் படவில்லை. அவர்கள் தமது அரசினையும்,தமது மகளையும் இராணுவத்தையும் பாதுகாப்பதற்காகவும் பயங்கரவாதத்தை ஆதரித்து போர்க்குற்றத்தை மேற்கொண்டவர்களையே அவர்கள் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் வியாழக்கிழமை (13) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு 2 லட்சம் ரூபாய் பணமும் மரண சான்றிதழ் வழங்க உள்ளதாக தெரிவித்துள்ளார். ஏற்கனவே ஒரு லட்சம் ரூபாய் வழங்க உள்ளதாக தெரிவித்தனர்.

தற்போது அதற்கு வட்டியுடன் சேர்த்து 2 லட்சம் தருவதாக கூறுகின்றனர். நாட்டில் ஏற்பட்ட இனப்படுகொலைக்கு எமது பிள்ளைகள்,உறவுகள் காணாமல் போனதற்கு காரணம் தற்போதைய ஜனாதிபதி.

ஆட்சிக்கு வருகின்ற அனைத்து அரசாங்கமும் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றுவதற்காகவும் நீதியை பெற்றுத்தரவதற்காகவும் அவர்கள் செயல்படவில்லை.

அவர்கள் தமது அரசினையும், தனது மகளையும் இராணுவத்தையும் பாதுகாப்பதற்காகவும் பயங்கரவாதத்தை ஆதரித்து போர்க்குற்றத்தை மேற்கொண்டவர்களையே அவர்கள் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். அவர்களையே இன்னும் பாதுகாக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக அம்மாக்கள் வீதிகளில் நின்று போராடி வருகின்றனர். கையில் ஒப்படைக்கப்பட்ட, கண் முன்னே பிடித்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளை தேடி நாங்கள் வீதியில் நின்று போராடி வருகிறோம். சுமார் 2 ஆயிரம் நாட்களையும் தாண்டியுள்ளது எமது போராட்டம்.

எமக்கு நீதி வேண்டும். எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? என்றே நாங்கள் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். நாங்கள் அரசிடம் நிதி கேட்கவில்லை. இவர்கள் வழங்கவுள்ள 2 இலட்சத்தையும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

நாங்கள் தொலைத்தது ஆடு, மாடுகளை இல்லை. எமது பிள்ளைகளையே. நாங்கள் கையில் ஒப்படைத்த, வீடுகளில் வந்து பிடித்துச் சென்ற எமது பிள்ளைகளையே கேட்கிறோம். இறந்தவர்களை கேட்கவில்லை.

இந்த சூழ்நிலையில் தற்போதைய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளார். குறித்த ஆணைக்குழு வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளிடம் விசாரணைகளை முன்னெடுக்க உள்ளனர்.

இனியும் அவர்கள் என்ன விசாரணைகளை மேற்கொள்ள போகிறார்கள்?

அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட,இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்ட எமது உறவுகளை ஒப்படைக்கும் படியே நாங்கள் கோருகிறோம்.

எமது பிள்ளைகள் எங்கே? என்ன நடந்தது என்றே கேட்கின்றோம். எங்களையும் ஏமாற்றி உலக நாடுகளையும் ஏமாற்றி ஜெனிவா கூட்டத்தொடர் இடம் பெறுகின்ற போது ஒவ்வொரு வருடமும் புதிது புதிதாக விடையங்களை சமர்ப்பிக்கின்றனர்.

எமது பிள்ளைகளை கொலை செய்து விட்டு 2 லட்சம் ரூபாய் பணத்தையும் மரண சான்று தலையும் வழங்க இந்த அரசு எத்தனிக்கிறது. நீங்கள் எங்களுக்கு 2 லட்சம் தர வேண்டாம். நாங்கள் உங்களுக்கு 4 லட்சம் தருகிறோம். எங்களது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று கூறுங்கள்.என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

# இலங்கைத் தமிழர்களுக்கு பொருள் பொதிந்த அரசியல் பகிர்வு வழங்கப்பட வேண்டும்!

**-கனடா நக்கீரன்**

கெடுகுடி சொற் கேளாது எனச் சொல்வார்கள். இலங்கையின் ஆட்சியாளர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையால் **(UNHRC)** நிறைவேற்றப்படும் தீர்மானங்களை தொடர்ந்து நிராகரித்து வருகிறது. இதுவரை இலங்கைக்கு எதிராக மொத்தம் 09 தீர்மானங்கள் ஐநாமஉ பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தத் தீர்மானங்களில் 2009 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நீங்கலாக எஞ்சிய தீர்மானங்கள் இலங்கைக்கு எதிரானவை.

2009 இல், யுத்தம் முடிவடைந்து 9 நாட்களுக்குப் பின்னர், இலங்கைக்கு ஆதரவாக ஐநாமஉ பேரவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்திய அரசால் கொண்டுவரப்பட்ட அந்தத் தீர்மானத்தின் ஒட்டுமொத்த தொனி பயங்கரவாதத்தை வெற்றிகரமாக ஒழித்துக் கட்டிய இலங்கையை பாராட்டுவதாக அமைந்திருந்தது.

2011 இல் இரா. சம்பந்தர் (நா.உ) தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்க இராசாங்க அமைச்சின் உயர் அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது. இந்தப் பேச்சு வார்த்தை ஒக்தோபர் 26 தொடங்கி நொவெம்பர் 04 மட்டும் நீடித்தது.

ததேகூ இன் இந்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து 2012 மற்றும் 2013 இல், ஐநாமஉ பேரவையில் அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும், இலங்கையில் நிலவும் மனித உரிமை மீறல்கள் மற்றும் நல்லிணக்கம் குறித்து கவலைகளைத் தெரிவித்தன. அவற்றையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஐநாமஉ பேரவையில் 2014 இல், நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கைபற்றி விரிவான விசாரணையை நடத்துமாறு கேட்டுக் கொண்டது. இந்த தீர்மானங்களை இலங்கை அரசு கடுமையாக எதிர்த்தது.

2015 இல், மங்கள சமரவீர வெளிநாட்டு அமைச்சராக இருந்த காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை அளித்தது. இதன் காரணமாக தீர்மானம் 30 -1 வாக்களிப்பின்றி நிறைவேற்றப்பட்டது. 2019 இல் ஆட்சிக்கு வந்த சனாதிபதி கோட்டாபய 2015 ஆம் ஆண்டில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட னன தீர்மானத்தை இனி மதிக்கப் போவதில்லை என அறிவித்தார்.

2022 ஒக்தோபர் 08 இல் நிறைவேற்றப்பட்ட **"இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்"** என்ற தீர்மானம் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் பற்றி மட்டுமல்ல ஊழல் ஒழிப்பு, நாட்டில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு ஒரு பொருள் பொதிந்த அரசியல் தீர்வை அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளது. இந்தத் தீர்மானத்ரதுக்கு 20 நாடுகள் ஆதரவாகவும் 7 நாடுகள் எதிராகவும் 15 நாடுகள் வாக்களிக்காது நடுநிலமை வகித்தன.

இது 2009 மற்றும் 2021 க்கு இடையில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்போடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இலங்கை அரச வியத்தகு ஆதரவை இழந்ததைக் சுட்டிக்காட்டுகிறது, அரசாங்கத்தை ஆதரிக்கும் நாடுகளின் எண்ணிக்கை 2009 இல் 47 இல் 29 இல் இருந்து, 2022 இல் 47 இல் 7 ஆகக் குறைந்தது. ஐநாமஉ பேரவையில் 47 உறுப்பினர்களில் 34 உறுப்பினர்களை உள்ளடக்கிய இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளின் ஆதரவை இலங்கை அரசு இழந்துள்ளது. கீழ்க்கண்ட அட்டவணை 1 ஐநாமஉ பேரவையில் 2009 இல் இருந்து 2022 ஆண்டுவரை இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மீது நடைபெற்ற வாக்கெடுப்பு விபரங்களைத் தருகிறது.

அட்டவணை 1

தீர்மானங்களுக்கான ஆதரவும் எதிர்ப்பும் 2009 - 2022

| | 2009 | 2012 | 2013 | 2014 | 2015 2017 2019 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரசுக்கு ஆதரவு | 29 | 15 | 13 | 12 | வாக்களிப்பு நடைபெறவில்லை (ஒருமனதான தீர்மானம்) | 11 | 7 |
| இலங்கை அரசுக்கு எதிர்ப்பு | 12 | 24 | 25 | 23 | | 22 | 20 |
| நடுநிலமை | 6 | 9 | 9 | 12 | | 14 | 14 |

பொருளாதார நெருக்கடியில் மனித உரிமைகள் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது குறித்தும் புதிய தீர்மானம் கவனம் செலுத்தியுள்ளது. இந்தியா, யப்பான், இந்தோனேசியா, கத்தார் மலேசியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட 20 நாடுகள் மனித உரிமை மீறல்களுக்கு தீர்வு காண வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வாக்களிக்கவில்லை.



**"இது** ஒன்றும் எதிர்பாராதது. தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு சில நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. எனவே நாங்கள் இதை முன்கூட்டியே அறிந்திருந்தோம். அமைப்பின் அமைப்பு மாறிவிட்டது, சில நட்பு நாடுகள் அங்கு இல்லை, சில விலகிவிட்டன**"** என்று அமைச்சர் அலி சப்ரி வாக்களிப்பு முடிந்தவுடன் கூறினார். இது விழுந்தும் மீசையில் மண் படவில்லை என்று சொன்னவன் கதையாக இருக்கிறது.

அமைச்சர் அலி சப்ரி மேலும் கூறுகையில் **"இது** 2009 ஆம் ஆண்டிலிருந்து (ஐநாமஉ பேரவையின்) நிகழ்ச்சி நிரலில் உள்ளது. உள்நாட்டில் நாம் ஒரு வலுவான உண்மையைத் தேடும் பொறிமுறையைக் கொண்டு வர வேண்டும். இதை 2009 ஆம் ஆண்டிலிருந்து வேறு எந்த நாடும் நமது உள் விவகாரத்தில் தலையிடாத அளவிற்குச் செய்திருக்க வேண்டும். எங்கள் நாட்டுக்கு எதிராக முன்மொழியப்பட்ட இந்த வரைவு தீர்மானம் பற்றிய அசாதாரணமான யோசனை, பரவலான தாக்கத்தை ஏற்படுத்தும். இதை அனுமதித்தால் இது மிகப்பெரிய ஆபத்தாக மாறும். இந்த தீர்மானத்தின்படி திட்டங்களை செயல்படுத்துவதாக இருந்தால், அதற்காக 2.8 மில்லியன் டாலர்கள் அளவுக்கு நிதி தேவை.**"** என்றார்.

இதுகாலவரை ஐநாமஉ பேரவை நிறைவேற்றிய தீர்மானங்கள் போல் அல்லாது புதிய தீர்மானம் மிகவும் கடினமானது. பன்னாட்டு வணிகத்தை கையாள்வதற்கான பலத்தை இலங்கை மேலும் இழக்கும். அல்லது தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் நாடு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறினால், ஐரோப்பிய ஒன்றியம் தனது **GSP** பிளஸ் வாணிப சலுகையைத் திரும்பப் பெறப் போவதாக ஏற்கனவே அச்சுறுத்தியுள்ளது. ஐரோப்பாவின் **GSP** பிளஸ் போன்ற வாணிக சலுகைகள் பல முக்கிய மரபுகள், மனித உரிமைகளுடன் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

இந்தியா செய்திகள் India News

# தமிழகத்தில் காஞ்சிபுரம் பகுதியில் தனியார் தொழிற்சாலையில் 75 பெண்கள் வாந்தி, மயக்கம்

## 15 பேர் கவலைக்கிடம்!! விஷமான உணவு



தமிழகத்தில் காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் அடுத்த ஊத்துக்காடு கூட்ரோடு பகுதியில் தனியார் தொழிற்சாலை 9 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இங்கு இரு சக்கர வாகனங்கள் மற்றும் கார்களுக்கான வயரிங் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் வாலாஜாபாத் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்தவர் தொழிலாளர்கள் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பணியாற்றி வருகின்றனர். இந்த தொழிற்சாலையில் மொத்தம் 3 ஷிப்டுகள் முறையில் பணி நடைபெற்ற வருகிறது.

அதன்படி அக்டோபர் 7ம் தேதி இரவு ஷிப்ட் தொழிலாளர்கள் சுமார் 3000க்கும் மேற்பட்டோர் தொழிற்சாலையில் உள்ள கேண்டினில் உணவை சாப்பிட்டனர். இதை பார்த்து அதிர்ச்சியடைந்த ஊழியர்கள், பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக தொழிற்சாலை பேருந்து மற்றும் ஆம்புலன்ஸ் மூலம் தனியார் மருத்துவமனைக்கும், வாலாஜாபாத் அரசு மருத்துவமனைக்கும் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அதில் உடல்நிலை மோசமடைந்த பெண் ஊழியர்கள் சிலர் தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாதிப்பு குறைந்த ஊழியர்கள் பொதுப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். தனியார் தொழிற்சாலையில் இரவு உணவு சாப்பிட்ட தொழிலாளர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட விவகாரம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கோவில் பிரசாதத்தை மட்டுமே உண்டு வந்த கேரள "சைவ முதலை" உயிரிழப்பு



75 ஆண்டுகளாக கோவிலை சுற்றி வந்த முதலை ஒன்று தற்போது மறைந்த விஷயம், அப்பகுதி மக்களை கடும் சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

கேரள மாநிலம், காசர்கோடு மாவட்டம் கும்பளா பகுதியை அடுத்த அனந்தபுரம் அருகே அனந்த பத்மநாபர் கோவில் அமைந்துள்ளது.

குளத்திற்கு நடுவே இந்த கோவில் அமைந்துள்ள நிலையில், திருவனந்தபுரம் பத்மநாபர் கோவிலுக்கு மூல ஸ்தானமாக இது விளங்குவது என்பது ஐதீகமாகவும் பார்க்கப்படுகிறது.

இந்த கோவிலின் குளத்தில் வாழ்ந்து வந்த முதலை ஒன்று இறந்து போயுள்ளது. பபியா என்ற பெயருடன் பக்தர்களால் அழைக்கப்பட்டு வந்த இந்த முதலை குறித்த தகவல்கள் தான் மிகவும் ஆச்சரியமான ஒன்றாக பார்க்கப்பட்டு வருகின்றன.

கோவில் குளத்தில் வாழ்ந்து வந்த பபியா முதலை, இந்த குளத்திற்குள் எப்படி வந்தது, அதற்கு பபியா என பெயரிட்டது யார் என்பது குறித்த விவரங்கள் சரிவர தெரியவில்லை. ஆனால், இந்த முதலையானது அங்கே வரும் பக்தர்கள் மத்தியில் தெய்வீக முதலையாக பார்க்கப்படுகிறது. அது மட்டுமில்லாமல், அங்கே வருபவர்களும் ஒரு முறையாவது இதனை பார்த்து விட மாட்டோமா என்று கூட ஏங்குவார்களாம்.

இதற்கு காரணம், அந்த முதலையிடம் உள்ள சில குணாதிசயங்கள் தான். கோவிலின் குளத்தில் மீன்கள் அதிகம் உள்ள போதும் இந்த முதலை அவற்றை உண்டதே இல்லையாம்.

மேலும், சைவ முதலையாக இது கருதப்படும் நிலையில், கோவிலில் நைவேத்தியம் செய்யப்பட்ட பச்சரிசி சாதத்தைத் தான் 75 ஆண்டுகளாக உண்டு வந்ததாம்.

அதே போல, பக்தர்கள் வழங்கும் சைவ உணவையும் இந்த முதலை உண்ணும் என கூறப்படுகிறது.

அமலும், இந்த பபியா முதலையானது பக்தர்கள் உள்ளிட்ட யாருக்கும் எந்த தீங்கும் விளைவித்ததே இல்லை என்றும் பக்தர்கள் குறிப்பிடுகின்றனர். அதே போல, ஒருமுறை கோவில் கருவறைக்குள் வந்து பபியா முதலை சாமி தரிசனம் செய்த வீடியோக்கள் மற்றும் புகைப்படங்களும் அதிகம் இணையத்தில் வைரலாகி இருந்தது.



இந்த நிலையில் தான், பபியா முதலை தற்போது உடல்நலக் குறைவால் இறந்து போயுள்ளது. முதலையின் உடல் கோவில் வளாகத்தில் பக்தர்கள் அஞ்சலி செலுத்த வைக்கப்பட்டிருந்தது. அதே போல, பபியா முதலை மறைந்ததால் கோவில் நடையும் திறக்கப்படவில்லை.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி



மன்னார் மாவட்டத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி மூலம் எதிர் கால தலைவர்களாக மாற்றியமைக்கும் செயற்திட்டம் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் பணிபாளர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையின் வியாழக்கிழமை (13) காலை 9 மணி தொடக்கம் மன்னார் முருங்கன் டொன்பொஸ்கோ கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.



இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவ பயிற்சி, பொருளாதார நெருக்கடி நிலையை எதிர்கொள்வதற்கான தொழில்வாண்மையை வளர்ப்பதற்கான பயிற்சி, போதை பொருளுக்கு அடிமையாகாது மகிழ்சியான குடும்ப சூழலை கட்டியெழுப்புவதற்கான பயிற்சி என பல தரப்பட்ட நடைமுறை பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகள் குறித்த செயற்திட்டத்தின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த பயிற்சிக்கு வளவாளராக திரு. பிரேம் அவர்கள் கலந்து கொண்டதுடன் மெசிடோ நிறுவன உத்தியோகஸ்தர்களும் பயிற்சியில் பங்கு பற்றியமை குறிப்பிடதக்கது.

- மன்னார் நிருபர்

# கிளிநொச்சி இலவன்குடா கிராஞ்சி மீனவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்

## டக்ளஸ் தேவானந்தாவிடம் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கோரிக்கை

கிளிநொச்சி இலவன்குடா கிராஞ்சி மீனவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் அவர்களின் வாழ்வாதார தொழிலை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இலவன் குடா கிராஞ்சி பிரதேசத்தை சேர்ந்த மீனவ சமூகங்கள், அப்பகுதியில் கடந்த பல நாட்களாக சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட கடல் அட்டை பண்ணைகளால் சிறு மீன் பிடிக் கரையோர தொழிலாளர்களாகிய தமது பாரம்பரிய மீன்பிடி தொழிலை முன்னெடுப்பதில் தடைகள் இருப்பதாக தெரிவித்து கடந்த 13 நாட்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலவன்குடா கிராஞ்சி கடற்கரையோரம் முழுவதும் சட்டவிரோதமாக கடல் அட்டை பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றினை பொறுப்பு வாய்ந்த அரசஅதிகாரிகள், திணைக்களங்கள் எவையும் எந்தவித அக்கறையும் கொள்ளவில்லை என பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இலவன் குடா கடற்பரப்பில், 60 வரையான பெண் தலைமைத்துவ அங்கத்தவர் உட்பட 25க்கு மேற்பட்ட கடற்தொழிலாளர் குடும்பங்கள் சிறகு வலை தொழிலின் ஊடாக இறால், நண்டு,மீன்பிடித்தலை தமது அன்றாட வாழ்வாதார தொழிலாக கடந்த 45 வருடங்களுக்கு மேலாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் அவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் தற்போது கடலட்டை பண்ணைகள் அமைக்கும் முயற்சிகள் அங்கு இடம்பெறுவதாக அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.



அத்துடன் தற்போது கடல் அட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் கடற்தாவரங்கள் அதிகம் காணப்படுகின்றமையால் அவ்விடங்களில் மீன் இனங்கள் இனப்பெருக்கம் செய்யும் இடமாக காணப்படுகிறது.

அவ்விடங்களில் பண்ணைகள் அமைக்கப்பட்டதால் மீன் இனங்களுக்கும் கரைக்குமான தொடர்பு தடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இரவு நேரங்களில் வெளிச்சமுள்ள மின்விளக்குகள் காரணமாக மீன்கள் கரையை நோக்கி உணவு தேடி வரமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

பாரம்பரிய மீன்பிடித் தொழில் புரியும் இடங்களில் பண்ணைகள் சட்டவிரோதமாக அமைக்கப்படுவதுடன், படகுகள் சிறுவள்ளங்கள் சென்றுவரும் தரித்து நிற்கும் துறைமுகப்பகுதிகளுக்குள்ளும் அட்டைப்பண்ணை அமைக்கப்பட்டு போக்குவரத்துக்கு பெரிதும் இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது ஆதங்கங்களை பின்வருமாறு தெரிவிக்கின்றனர்.

குறித்த பண்ணைகள் அமைக்கப்படுவதற்காக பாரம்பிய தொழில்கள் புரியாத இடங்கள் இருந்தும் நாம் தொழில் புரியும் பகுதிகளிலும் துறைமுகங்களிலும் பண்ணை அமைந்திருப்பது எந்த வகையில் நியாயமானது?

குறித்த பண்ணைகளானது ஆரம்பிக்கும்போது பாரம்பரிய தொழில்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படும் வகையில் அமையாது என கூறப்பட்டதற்கு மாறாக அமைக்கப்படுகின்றது. இரவோடு இரவாக அத்துமீறி பாரம்பரிய மீன்பிடி புரியும் இடங்களில் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒருசில முதலாளிகளின் நலனுக்காக ஒட்டுமொத்த மீனவர் சமூகத்தையும் சுடுகாட்டிற்கு அனுப்புகின்ற செயலாகவே கருதுகின்றோம்.

இவ் மனச்சாட்சியற்ற செயலுக்கு பாராமுகம் காட்டும் அமைப்புக்களிடமிருந்து எமக்கு நீதி கிடைக்காமைக்கான காரணம் என்ன? ஏழைகள் கடலுக்குள் இறங்கக்கூடாதா? நாம் எந்த வகையில் எமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்வது?

இது தொடர்பாக நியாயம் கேட்ட மீனவர்கள் ஒருசிலர் மீது நீரியல் வளத்துறையினரால் பொய்யான முறைப்பாடுகளைக் கொண்டு சிறகுவலை முறைமையானது சட்டவிரோதமான தொழில் என அதிகாரியால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இவ்வாறு பொய்யான முறைப்பாடுகளை முன்வைத்து பாரம்பரிய தொழில் புரியும் இடங்களை விட்டு எம்மை அகற்ற நினைக்கின்றனர்.

எமது வாழ்வாதாரத்தை பறித்து இன்னொருவருக்கு வாழ்வளிப்பது நியாயமானதா?என பாதிக்கப்பட்ட கிளிநொச்சி இலவன்குடா கிராஞ்சி பிரதேச மீனவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

மேலும் கடல் அட்டை பண்ணைகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலும் தமது எதிர்ப்பை இப்பகுதி மக்கள் வெளிப்படுத்தியபோது, அவர்களது வாழ்வாதார தொழில் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பண்ணைகள் அமைக்கப்படும் என சமரச உத்தரவாதம் கடற்றொழில் அமைச்சு அதிகாரிகளால் தமக்கு வழங்கப்பட்டதாகவும், அந்த உத்தரவாதத்தை மீறும் வகையில் தமது வாழ்வாதார தொழில்செய்யும் பகுதிகளை ஆக்கிரமித்தும் தற்போது பண்ணைகள் அமைக்கப்படுவதாகவும் பிரதேச மக்கள் தமது குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.



இது தொடர்பாக கடற்றொழிலாளர் சங்கம், கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்களம், பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் காரியாலயம் ஆகிய தரப்புகளுக்கு பலமுறை கடிதம் மூலமாக மக்கள் அறிவித்திருந்த போதும் சரியான தீர்வு கிடைக்கப்பெறவில்லை என ஆதங்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயங்கள் அனைத்தும் கௌரவ கடற்றொழில் அமைச்சர் என்கிற அடிப்படையில் தங்களது கவனத்து கொண்டுவரப்பட்டிருக்கும் என நம்புகிறேன்.

வணிகசார் நிறுவனங்களை அமைக்கும்போது, அச்சூழலில் வாழ்வாதாரத்தை அடிப்படையாக கொண்டுள்ள சிறு தொழிலாளர்கள் பாதிப்படையக்கூடாது என்பதே அபிவிருத்தியின் அடிப்படை தத்துவமாகும். அந்த தத்துவம் இவ்விடயத்தில் மீறப்படுமாயின் அது மிகவும் கவலைக்குரியதும் கண்டனத்துக்குரியதுமான விடயமாகும்.

நாட்டின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்காக கடல் அட்டைப் பண்ணைகள் போன்ற புதிய தொழிற்துறை முயற்சிகள் நடைபெறுவதும் அதனூடான அந்நிய செலவாணி வருகையும் அவசியமானதாக உணரப்பட்டாலும், அச்செயற்பாடுகள் சாதாரண மக்களின் வயிற்றில் அடிக்கும் செயல்களாக அமையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

குறித்த பிரதேச மக்கள் கேட்டுக் கொள்வதற்கமைய தமது மீன்பிடி செயற்பாட்டு பகுதிகளை விடுத்து ஏனைய இடங்களில் இத்தகைய பண்ணைகளை அமைப்பது பொருத்தமானதும் வரவேற்கத்தக்க விடயமாகவும் அமையும்.

மாறாக, இலவன்குடாகிராஞ்சி பிரதேசத்து மக்களுக்கு இயற்கை கொடுத்துள்ள கடல்வளத்தை குறிப்பிட்ட சிலர் மாத்திரம் சூறையாடி பயன்படுத்தி அதனூடான பலாபலன்களை பெற்றுச் செல்வதும் அதற்கு அரச அதிகாரிகள், திணைக்கள அதிகாரிகள் துணைநிற்பதும் ஏற்றுக்கொள்ள முடியாதது. அத்துடன் நாட்டின் கடற்றொழில் அமைச்சராக விளங்கும் தாங்கள், இத்தகைய வாழ்வாதார மீனவர்களின் நலனை கருத்தில் கொள்ள வேண்டும் என்பதும் மக்களுடையதும் எனதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

எனவே தமது வாழ்வாதார கடல்வளத்தை மீட்பதற்காக தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கிளிநொச்சி இலவன்குடா கிராஞ்சி பிரதேச மீனவர்களின் கோரிக்கைகளை செவிமடுத்து உடனடி நடவடிக்கை எடுத்து, அங்கு அமைக்கப்படும் சட்டவிரோத கடல் அட்டை பண்ணைகளை தடைசெய்து குறித்த மக்களுக்கு நீதி வழங்குமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

என கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.







- மன்னார் நிருபர்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

# இலங்கைத் தமிழர்களுக்கு பொருள் பொதிந்த அரசியல் பகிர்வு வழங்கப்பட வேண்டும்!

இருபத்தாறு ஆண்டுகால யுத்தம் 2009 இல் முடிவடைந்த பின்னர் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பாக இப்போது நிறைவேற்றப்பட்ட ஐநாமஉ பேரவையின் தீர்மானம் 7 ஆவது தீர்மானமாகும். தீர்மானம் 30-1 க்கு ஒத்துழைக்க இலங்கை முடிவு செய்ததால் 2015 இல் வாக்கெடுப்பு நடைபெறவில்லை.

முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி மற்றும் ஊழல் போன்றவற்றிலிருந்து மீள்வதற்கு அனைத்து வெளிநாட்டு நாடுகளின் ஆதரவையும் இலங்கை நாடியுள்ள நிலையில், முன்னாள் பிரதமர் மற்றும் சனாதிபதி அவர்களின் பொருளாதார முறையற்ற நிர்வாகத்தின் பின்னர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட நிலையில், இந்தப் புதிய தீர்மானம் வந்துள்ளது.

புதிய தீர்மானம், இலங்கையின் முன் எப்பொழுதும் இல்லாத பொருளாதார நெருக்கடிக்கு காரணமான மூல காரணங்களை நிவர்த்தி செய்வதன் அவசியத்தை கோடிட்டுக் காட்டுகிறது. மனித உரிமைகளை ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் ஊழலைத் தடுப்பது மற்றும் எதிர்த்துப் போராடுவது ஆகியவை பரஸ்பரம் வலுவூட்டுகின்றன என்பதையும் இது அங்கீகரிக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் **Volker Turk** தனது அறிக்கையில் இராணுவ செலவினங்களைக் கணிசமாகக் குறைக்கவும், ஊழலைத் தீர்க்கமான முறையில் சமாளிக்கவும், சர்வதேச ஒத்துழைப்பின் மூலம் மக்கள் நல்வாழ்வு, சமூகப் பாதுகாப்பு மற்றும் கல்வியில் முதலீடுகளை அதிகரிக்கவும், பன்னாட்டு நிதி உதவித் திட்டங்களின் சாத்தியமான மனித உரிமைகள் தாக்கத்தை மதிப்பீடு செய்யவும் மற்றும் அதைக் குறைக்க தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கவும் பரிந்துரைத்துள்ளார்.

மேலும் பழிவாங்கல் அல்லது கைதுக்கு அஞ்சாமல் மக்கள் சுதந்திரமாகவும் அமைதியாகவும் எதிர்ப்பு தெரிவிக்கவும், தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவும் முடியும் என்பதை உறுதிப்படுத்தவும் அண்மையில் நடந்த போராட்டங்களில் பங்கேற்ற அல்லது ஆதரித்ததாக நம்பப்படும் நபர்களை துன்புறுத்துதல், மிரட்டுதல் மற்றும் தன்னிச்சையாக கைது செய்வதை நிறுத்துதல் மனித உரிமைப் பாதுகாவலர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு எதிரான அனைத்து வகையான கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல் மற்றும் பழிவாங்கும் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் ஆணையர் கேட்டுக் கொண்டார்.

உலக வாணிக அமைப்பு, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற பன்னாட்டு அமைப்புகளுக்கான (ஜெனீவா) ஐக்கிய இராச்சிய தூதரும் நிரந்தரப் பிரதிநிதியுமான சைமன் மேன்லி, தீர்மான உரை பெரும்பாலும் கடந்த ஆண்டு தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டது, ஆனால் கடந்த காலத்தின் சில முக்கிய முன்னேற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது என்றார். 18 மாதங்கள் பொருளாதார நெருக்கடி, வெகுமக்கள் எதிர்ப்புக்கள் மற்றும் அரசாங்க மாற்றம் உட்பட, இவை அனைத்தும் நாட்டின் மனித உரிமைகள் நிலைமையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

தீர்மானத்தில் உள்ள முக்கிய கோரிக்கைகள், கடந்த ஆண்டு தீர்மானத்தில் தொடங்கப்பட்ட பணிகளைத் தொடர முயல்கின்றன. இது உயர் ஆணையர் அலுவலகத்திற்கு நீதித்துறை மற்றும் பிற நடவடிக்கைகளுக்கு ஆதரவாக தகவல்களைச் சேகரிக்கவும், ஒருங்கிணைக்கவும், பகுப்பாய்வு செய்யவும் மற்றும் பாதுகாக்கவும் வழி கோலியுள்ளது.

"கடந்த காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கையின் உள்நாட்டு சட்டப் பொறிமுறைகளால் ஏற்பட்ட முன்னேற்றம் இல்லாததால் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது" என்றார்.

ஐநாமஉ பேரவையின் தீர்மானம் இலங்கை மீதான பன்னாட்டு விசாரணையின் அவசியத்தை பிரதிபலிக்கிறது என சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியாவிற்கான பிரதிப் பிராந்திய பணிப்பாளர் தினுஷிகா திஸாநாயக்க தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கும் தீர்மானத்தை ஆதரிக்குமாறு அனைத்துலக நாடுகளைக் தாங்கள் கேட்டுக்கொள்வதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

பழிவாங்கல் அல்லது கைதுக்கு அஞ்சாமல் மக்கள் சுதந்திரமாகவும் அமைதியாகவும் போராட்டம் நடத்தவும், தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவும் முடியும் என்பதை உறுதிப்படுத்தவும் சமீபத்திய போராட்டங்களில் பங்கேற்ற அல்லது ஆதரித்ததாக நம்பப்படும் நபர்களை துன்புறுத்துதல், மிரட்டுதல் மற்றும் தன்னிச்சையாக கைது செய்வது, மனித உரிமைப் பாதுகாவலர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு எதிரான அனைத்து வகையான கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல் மற்றும் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு முடிவு கட்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்தியா வாக்கெடுப்பில் நடுநிலை வகித்தாலும் ஐ.நாட்டுக்கான இந்தியாவின் நிரந்தரத் தூதுவர் இந்திராணி பாண்டே அவர்களின் உரை முக்கியத்துவம் பெற்றுள்ளது. "இலங்கைத் தமிழர்களின் நியாயமான வேட்கைகளான செழிப்பு, கண்ணியம் மற்றும் சமாதானத்தை வழங்குவதன் மூலம் இலங்கையின் சகல மக்களும் செழிப்பாக வாழலாம். இவை இரண்டும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் ஆகும்" என அவர் தெரிவித்தார். உடனடி அண்டை நாடாக, 2009 க்குப் பிறகு இலங்கையில் நிவாரணம், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் புனரமைப்புச் செயன்முறைகளுக்கு இந்தியா "கணிசமான பங்களிப்பை" வழங்கியதுடன், சமீபத்திய பொருளாதார நெருக்கடியின் சவால்களை எதிர்கொள்ள இலங்கை மக்களுக்கு "முன்னோடியில்லாத உதவிகளை" வழங்கியது. 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதன் மூலம் பொருள் பொதிந்த அதிகாரப்பகிர்வு, மற்றும் மாகாணத் தேர்தல்களை முன்கூட்டியே நடத்துதல் ஆகியவை தொடர்பான உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்புகளை இந்தியா "கவனித்துக்கொண்டுள்ளது" என்று திரு. பாண்டே கூறினார்.

"இலங்கையில் அதிகாரப் பகிர்வு, தீர்மானத்திலும் குறிப்பிடப்பட்ட ஒரு சிக்கல், நோக்கிய முன்னேற்றம் போதுமானதாக இல்லை என்று நாங்கள் நம்புகிறோம். அதற்கிணங்க, இந்த உறுதிமொழிகளை விரைவாக செயல்படுத்துவதற்கு அர்த்தமுள்ள வகையில் செயல்படுமாறு இலங்கை அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்" என்றும் இந்திய இராசதந்திரி கூறினார்.

இந்தியாவின் வேண்டு கோள்களை இராசபக்ச ஆட்சி நிராகரிதது போலவே சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க ஆட்சியிலும் நிராகரிக்கப்பட்டு வருகிறது. தமிழர்களுக்குத் சொந்தமான காணிகள் அபகரிப்பு, அபகரித்த காணிகளை விடுவிக்க மறுத்தல், பவுத்த மத மரபு சின்னங்கள் என்ற போர்வையில் இந்துக் கோயில்களுக்கு நெருக்கடி கொடுத்தல் தொடர்ந்து நடைபெறுகிறது.

இலங்கை ஆட்சியாளரிடம் காணப்படும் தீவிர இனவாதம், மதவாதம், மொழிவாதம் காரணமகாவே பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து அந்த நாடு ஒட்டாண்டி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இது தெரிந்தும் சிங்கள - பவுத் பேரினவாதிகள் அவற்றைக் கைவிட அணியமாக இல்லை.



# மொன்றியாலில் கர்நாடக சங்கீதத்தை இளைய தலைமுறையினருக்கு கற்றுத் தருவதில் முன்மாதிரியாகத் திகழ்வது செல்வமலர் மதுரநாயகம் அவர்களின் மதுரகான மன்றம் இசைக் கல்லூரியாகும்

## இசைச் செல்விகள் உமையாழினி அபிஷனா ஆகியோரின் இசை அரங்கேற்றத்தில் உதயன் லோகேந்திரலிங்கம் புகழாரம்



"இன்றைய இசையரங்கேற்றத்தின் நாயகிகள் உமையாழினி மற்றும் அபிஷனா ஆகியோரை அரங்கேற்றம் வரையும் அழைத்து வந்து மேடையில் அமர வைத்துள்ள அவர்களது குரு செல்வி நயனி மதுரநாயகம் அவர்களின் கன்னி அரங்கேற்றம் பல சிறப்புக்களை கொண்டதாக விளங்குகின்றது.

குறிப்பாக மொன்றியால் நகரில் கர்நாடக சங்கீதத்தை எமது இளைய தலைமுறையினருக்கு கற்றுத் தருவதில் முன்மாதிரியாகத் திகழ்வது ஸ்ரீமதி செல்வமலர் மதுரநாயகம் அவர்களின் மதுரகான மன்றம் இசைக் கல்லூரியாகும் இதனை நான் உணர்கின்றேன். தான் நிறுவிய இந்த மதுரகான மன்றத்தின் சிரேஸ்ட மாணவிகள் இருவரையும் தனது புதல்வியிடம் ஒப்படைத்து அவர்களை புகழின் உச்சத்திற்கு கொண்டு வந்துள்ள ஸ்ரீமதி செல்வமலர் மதுரநாயகம் அவர்களையும் அவரது புதல்வியும் இசையாசிரியையுமான நயனி அவர்களையும் மொன்றியால் வாழ் மக்கள் பாராட்டி ஊக்கமளிக்க வேண்டும்".

இவ்வாறு மேற்ப இசையரங்கேற்றத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என் லோகேந்திரலிங்கம் புகழாரம் சூட்டினார்.

மொன்றியால் மதுரகான மன்றம் இசைக் கல்லூரி ஸ்தாபகர் ஸ்ரீமதி செல்வமலர் மதுரநாயகம் அவர்களின் புதல்வியும் சிரேஸ்ட மாணவியுமான செல்வி நயனி மதுரநாயகம் அவர்களின் மாணவிகளான இசைச் செல்விகள் உமையாழினி உதயகுமார். அபிஷனா கஜரூபன் ஆகியோரின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம் 08-10-2022 சனிக்கிழமை மொன்றியால் நகரில் College Ahuntsic-- 155 Rue Street. Hubert, Montreal கல்லூரி மண்டபத்தில் மாலை 5.30 மணி தொடக்கம் நடைபெற்றது.

இசைச் செல்விகள் உமையாழினி உதயகுமார். அபிஷனா கஜரூபன் ஆகியோரின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றது. மேற்படி அரங்கேற்றத்திற்கு பிரதம விருந்தினராக மொன்றியால் வாழ் நடன மற்றும் வீணைக் கலைஞர் சேஷா கமல் ஐயங்கர் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார். சிறப்பு விருந்தினராக கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அழைக்கப்பெற்றிருந்தார்.

அரங்கேற்றச் செல்விகளுக்கு பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் வாத்தியக் கலைஞர் டாக்டர் அஞ்சனா சிறினிவாசன். மிருதங்கக் கலைஞர் ரொறன்ரோ ரதிரூபுன் பரம்சோதி. கடம் கலைஞராக ரொறன்ரோ ரமணா இந்திரகுமார் மற்றும் தம்புரா கலைஞராக செல்வி எவ்லீன் ராஜதுரை ஆகியோர் தங்கள் பங்களிப்புக்களை நேர்த்தியாக அளித்தனர்.

அங்கு உரையாற்றிய பிரதம விருநதினர் மொன்றியால் வாழ் நடன மற்றும் வீணைக் கலைஞர் சேஷா கமல் ஐயங்கர் அவர்கள் தனது உரையின் போது மொன்றியால் மதுரகான மன்றம் இசைக் கல்லூரி ஸ்தாபகர் ஸ்ரீமதி செல்வமலர் மதுரநாயகம் அவர்களையும் அவரது புதல்வியும் சிரேஸ்ட மாணவியுமான செல்வி நயனி மதுரநாயகம் அவர்களையும் அரங்கேற்றம் கண்ட மாணவிகளான இசைச் செல்விகள் உமையாழினி உதயகுமார். அபிஷனா கஜரூபன் ஆகியோரையும் பக்கவாத்தியக் கலைஞர்களையும் திறம்படப் பாராட்டி மகிழ்ந்தார்.

அவர் ஒரு நடனக் கலைஞராகவும் வீணை வாத்தியக் கலைஞராகவும் விளங்குவதால் கர்நாடக சங்கீதத்தின் பல நுட்பங்களை எடுத்துரைத்து அவ்வாறான அம்சங்களை அரங்கேற்றச் செல்விகளின் குரு எவ்வாறு தனது மாணவிகளுக்காக அர்ப்பணித்துள்ளார் என்பதையும் விளக்கினார். அத்துடன் அரங்கேற்றச் செல்விகளுக்கும் தனது நினைவுப் பரிசுகளை வழங்கினார்.
















ரொறன்ரோ பல்கலைக்கழகம் ஸ்காபரோ நூலகம்
எண்ணிம புலமைப் பிரிவு

முனைவர் பால. சிவகடாட்சம்
ஆக்கிய

**தமிழர் மருத்துவம்:**
**ஒரு வரலாற்றுப் பார்வை**

**நூல் வெளியீடு விழா**

**நூல் மதிப்பீடு**

பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன்
மருத்துவர் ராமநாதன் லம்போதரன்






**ரொறன்ரோ பல்கலைக்கழக ஸ்காபரோ வளாக நூலகத்தின் கனேடிய தமிழ் ஒலைச் சுவடிகள் எண்ணிம சேகரத்தின் வெளியீடு**

Date: Saturday, October 15, 2022

Time: 5:30 PM

Location: Ralph Campbell
Lounge Room# BV-380
(near the Bookstore)
1265 Military Trail,
Scarborough, ON
M1C 1A4



Please park in Lot G or H. Bring the ticket, and we will provide you with a free parking ticket.

416-438-3946





# Kurunthurmalai: A Classic Case of Land Grabbing and Lawlessness in Sri Lanka



For successive Sri Lankan governments disrespecting court orders, and going back on assurances to the people, international bodies including the UN has become a norm.

As the 51st session of the UN Human Rights Council discussed the situation in Sri Lanka, continued land grabbing and intimidation of Tamils under the draconian Prevention of Terrorism Act (PTA) continues. And the construction of a Buddhist Vihara in utter disregard to a court order has brought to fore that a set of different laws and rules exist for the Buddhist hardliners.

Even in her last update, The UN Human Rights High Commissioner pinpointed land grabbing under the guise of Archaeological sites and warned such acts were an impediment to reconciliation.

“There has also been a more recent trend of land disputes in relation to the construction of Buddhist heritage conservation or for forestry protection, mainly in the Northern and Eastern Provinces, which has further jeopardized reconciliation and created new conflicts. In June 2022, the Army facilitated the dedication of a new Buddhist shrine in Kurunthurmalai, Mullaitivu, in violation of a Court order that prohibited any new edification in an area that is claimed by Hindu and Buddhist worshippers. On 14 July, Mullaitivu court ordered the removal of all new constructions, including a new Buddhist shrine”.

In the last few days, the statement of the High Commissioner has become true.

War-affected Tamils & civil society activists staged a protest to save their traditional homeland and their culture and right to worship and protect their religious places.



Local leaders protesting against the building of a Buddhist Vihara in spite of a court order in the traditional Tamil homeland Kurunthurmalai in Mullaitivu district were arrested.

They were accused of ‘criminal coercion’. A local journalist says 11 lawyers from the Mullaitivu bar association were present in the court to argue the case on behalf of those arrested.

While two prominent locals were released on bail immediately another was remanded in custody for over a couple of days and then released on conditional bail.

Protestors condemned the state for contempt of court and demanded to halt the ‘illegal’ constructions.

The archelogy department while denying to show any documents to prove it’s a ‘sacred land’ lodged a complaint with the Mullaitivu police based on which Tamils were summoned and arrested. The video of an archaeological department official denying to show any proof went viral on social media.

If it’s an archaeological place it can only be or must be protected and no construction can be allowed. If so, it raises questions about the claim of being an archaeological site.

Tamil National People’s Front (TNPF) spokesperson and attorney Suhas was chased away by the police who questioned them about the continued construction when there was a stay order by the local court.

More than 600 acres of land belonging to the Tamils in the Thannimurippu Kurunthurmalai area were grabbed by the state through the Archelogy department and the construction of a massive Buddhist temple started with the support of the ‘oppressive’ Sri Lankan Army as said by TNPF leader Gajendra Kumar Ponnambalam in the Parliament during the discussion on the interim budget.



The Mullaitivu court had ordered on 6th June this year to maintain the status quo as on that date i.e., ‘no further construction nor demolition.’ But in contempt of that order, the construction took place which forced the Tamils to protest.

While Tamils were barred from entering the area, Buddhist monks and the construction workers with the help of the army were able to freely access the place and continue with the ‘illegal’ construction of the Vihara.

“The Sri Lankan Army back the aggressive act of a Buddhist Monk who constructs a Vihara against court orders. Unless & until these monks are disciplined nothing is going to change is Sri Lanka” tweeted Tamil Progressive Alliance leader and MP Mano Ganesan.

Civil society activists point out that while the illegal grabbing of the Tamil’s land continues unabated in the North and East, the South including the said-to-be mainstream English and Sinhala media maintain a stoic silence about the suffering of the Tamils and the construction of the Buddhist Vihara in Kurunthurmalai. They also point out ‘there are two sets of laws in the country-One for the Tamils & Muslims and the other for the Sinhalese’.

Construction of a Buddhist Vihara in the traditional homeland of the Tamils and that too at a very holy place with a Hindu shrine dedicated to Lord Siva is described as detrimental to communal harmony.



War affected Tamils’ question “why the Buddhist monks and the archaeological authorities who went ahead with the construction in spite of the court’s order weren’t questioned and arrested, while the Tamil protestors demanding the implementation of the court’s order and their right to their traditional homeland were arrested”.

The funding for the Kurunthurmalai Vihara constructed by Shantabodi Thero was allegedly funded by business tycoon and former president of the All Ceylon Buddhist Congress Jagat Sumathipala, whose controversial brother Tilanga Sumathipala is being investigated by the Anti-corruption unit of the International Cricket Council on corruption allegations.

Adding insult to injury, Colombo district MP from the Ruling coalition and former Navy chief Rear Admiral Sarath Weerasekara vowed in parliament to carry on with state-sponsored construction of a Buddhist Temple on the archaeological site in Kurunthurmalai and settling people in the neighborhood of Thirukoneswaram Kovil disregarding Tamil opposition.

The opposition to his comments were immediate and hard-hitting. TNA MP Siritharan while replying to him said, “Sarath Weerasekara is deliberately misleading people and speaks what’s far from the

- Siva Parameswaran



truth”.

The land grabbing and illegal construction at Kurunthurmalai and the threat of repeating the same at Trincomalee by hardline Sinhala politicians have made the Tamils even vulnerable.

With thousands of acres of land more so fertile ones yet to be returned to the Tamils, the UNHRC commissioner’s report touched on the land issue as well.

“In his 8 August 2022 speech, the President acknowledged that there are many land issues that need to be resolved”. The Government reports that the total number of private lands released by the Armed Forces from 2009 to June 2022 is 92% which is far from the truth according to Tamil MP’s who say, in Kurunthurmalai itself the occupation is more than 600 acres. Plans are already underway to acquire another 617 acres of land in the Vattuvakal area in Mullaitivu District for the Gotabaya Naval Camp. It was in the same Vattuvakal area that thousands of Tamils were handed over or surrendered to the Military at the end of the war and many others who were taken away for interrogation from camps were never to be seen again.

If Sri Lanka needs to tackle its economic crisis, it would very much need the support of the international community and any such support will always be tagged to securing Human Rights and the rule of the law and accountability which unfortunately doesn’t seem to matter for the government.





# ஜெனிவாவில் இந்தியாவின் நிலைப்பாடு

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

**ஜெ**னிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட முன் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதில் இலங்கை அரசாங்கத்தை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்துமாறு இந்தியா ஐநாவில் கேட்க வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்தியா கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டு வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இந்த ஆண்டு வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத நாடுகளின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகம். இந்தியா அவ்வாறு நடுநிலை வகிக்கக்கூடும் என்ற ஊகம் ஏற்கனவே இருந்தது.

சில மாதங்களுக்கு முன்பு சீனாவின் ராணுவ ஆய்வுக் கப்பல் ஒன்று அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வந்தது. இந்தியா அதைத் தடுக்க முயற்சித்தது. ஆனால் முடியவில்லை. அதனால் கோபமடைந்த இந்தியா தனது சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தியது. இலங்கைத்தீவில் நிலைமை சரியாக இல்லை என்றும் கூறியது. இந்த அறிவிப்பினால் கடந்த ஆகஸ்ட், செப்டம்பர் மாதமளவில் இலங்கைக்கு வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைந்ததாகப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் அதிக தொகையினர் இந்தியாவில் இருந்து வருகின்றார்கள். எனவே பொருளாதார ரீதியாக அது இலங்கை அரசாங்கத்தின் மீதான ஒரு வகை மென் அழுத்தம்தான்.

இதைவிடக் கடுமையான அழுத்தத்தை இந்தியா பிரயோகிக்க வேண்டும் என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டிருந்தது. ஆனால் இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இந்திய மத்திய அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக சில சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் முயற்சி செய்தார்கள். தமிழகத்தில் உள்ள கட்சிகளை அணுகி ஜெனிவாக் கூட்டத் தொடரில் இந்தியாவின் நிலைப்பாட்டை மாற்றும் விதத்தில் அழுத்தங்களை பிரயோகிக்குமாறு கேட்டிருந்தார்கள்.

அதேசமயம், இலங்கை நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளைச் சேர்ந்த 13 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிவில் சமூகங்களோடு இணைந்து அந்த கோரிக்கையை தமிழகத்தை நோக்கியும் மத்திய அரசாங்கத்தை நோக்கியும் முன்வைக்க வேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் இரண்டுமே நடக்கவில்லை.

தமிழகத்தில் உள்ள திராவிடக் கட்சிகள் இந்த விவகாரத்தில் ஆர்வம் காட்டவில்லை. இலங்கை விவகாரத்தில் தலையிட்டு கையைச் சுட்டுக் கொள்ள அவர்கள் தயார் இல்லை என்று தெரிகிறது. தமிழக சட்டசபையில் இது தொடர்பாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றலாமா என்று சில ஈழ ஆதரவு செயற்பாட்டாளர்கள் முயற்சித்தார்கள். அதுவும் வேலை செய்யவில்லை. இரண்டு பெரிய திராவிடக் கட்சிகளும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக மத்திய அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு தயாராக இல்லை. அவர்கள் கிட்டத்தட்ட ஈழத் தமிழர்களின் விவகாரத்தில் இருந்து ஒதுங்கி இருக்க விரும்புவதாக தெரிகிறது.

அதேசமயம் தமிழகத்தில் பலமாக காலூன்ற முயற்சித்துக் கொண்டிருக்கும் பாரதிய ஜனதா கட்சியானது, ஈழத் தமிழர்களின் விவகாரத்தை தனது கையில் எடுத்து திராவிட கட்சிகளை எப்படி ஒதுக்கலாம் என்று திட்டமிட்டு உழைக்கின்றது. அக்கட்சிதான் மத்திய அரசாங்கத்தில் ஆளுங்கட்சியாக உள்ளது. எனவே தமிழ் மக்கள் தொடர்பான அக்கட்சியின் நிலைப்பாடானது ஜெனிவாவில் இந்தியாவின் பிரதிநிதி ஆற்றிய உரைக்கு வெளியே போகாது.

இப்படிப்பட்டதொரு பின்னணியில், வழமை போல ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான வைகோ ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதன் பின் பாட்டாளி மக்கள் கட்சியின் முக்கியஸ்தரான அன்புமணி ராமதாஸ் ஓர் அறிக்கையை வெளியிட்டார். சீமானின் கட்சி அப்படி ஒரு அறிக்கை விடத் தயாராக இருக்கவில்லை. அக் கட்சி புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் சிலவற்றோடும் தனி நபர்களோடும் இறுக்கமான உறவுகளைக் கொண்டிருக்கிறது. எனினும் அக்கட்சிகூட ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக மத்திய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுவதற்கு அல்லது குறைந்தபட்சம் தமிழகத்தில் உள்ள திராவிடக் கட்சிகள் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு தயாராக இருக்கவில்லை. அக்கட்சியோடு தொடர்புடைய புலம்பெயர்ந்த தமிழர்கள் பெருமளவுக்கு ஐநா தீர்மானத்தையோ ஜெனிவா அரசியலையோ ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. எனவே ஒன்றுக்கும் உதவாத ஜெனிவாத் தீர்மானத்தைப் பற்றி அலட்டிக் கொள்வதற்கு அவர்களும் தயாரில்லை. சீமானும் தயாரில்லை என்று தோன்றுகிறது.

இப்படியாக தமிழகத்தில் உள்ள கட்சிகள் ஜெனிவா தீர்மானம் பொறுத்து இந்திய மத்திய அரசாங்கத்தை நோக்கி கோரிக்கைகளை முன்வைக்கத் தயக்கம் காட்டின.

அதேசமயம் தமிழக செயற்பாட்டாளர்கள் சிலர் இலங்கையில் இருந்தும் அவ்வாறான ஒரு கோரிக்கையை தமிழ் மக்கள் முன்வைக்க வேண்டும் என்று கேட்டார்கள். இலங்கையில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிவில் சமூக பிரதிநிதிகளும் இணைந்து தமிழ்க் கட்சிகளை நோக்கியும் இந்திய மத்திய அரசாங்கத்தை நோக்கியும் மேற்படி கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் அதற்கு இலங்கையில் உள்ள தமிழ்ச் செயல்பாட்டாளர்கள் தயாராக இருக்கவில்லை. ஏனென்றால், ஏற்கனவே கடந்த ஆண்டு ஆறு தமிழ் கட்சிகள் இணைந்து இந்திய மத்திய அரசாங்கத்திற்கு கூட்டுக் கோரிக்கைகளை முன்வைத்தன. அக்கோரிக்கைகளுக்கு இன்று வரையிலும் மத்திய அரசாங்கம் நேரடியாகப் பதில் கூறவில்லை. இத்தனைக்கும் அக்கோரிக்கைகளை முன் வைத்த கட்சிகளுக்குள் இந்திய அமைதி காக்கும் படையின் காலகட்டத்தில் இந்தியாவோடு நெருங்கிச் செயற்பட்ட இயக்கங்களும் உண்டு.

மேலும் அந்தக் கூட்டுக் கோரிக்கைகள் தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடுமையான எதிர்ப் பிரச்சாரத்தை முன்னெடுத்தது. மேற்படி ஆறு கட்சிகளும் 13 ஆவது திருத்தத்தை அமல்படுத்துமாறு கேட்கின்றன என்றும், அவை இந்தியாவின் ஏஜென்ட்கள் என்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி குற்றம் சாட்டியது. குற்றச்சாட்டுகளோடு அவர்கள் நிற்கவில்லை, மேற்படி 6 கட்சிகளுக்கும் எதிராக இரண்டு பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை அவர்கள் ஒழுங்குபடுத்தினார்கள். அந்த ஆர்ப்பாட்டங்கள் யாழ்ப்பாணத்திலும் வுனியாவிலும் இடம்பெற்றன. இதில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் முடிவில் கிட்டுப் பூங்காவில் ஒரு பிரகடனம் வாசிக்கப்பட்டது. அப்பிரகடனம் மேற்படி ஆறு கட்சிகளுக்கும் எதிரானதாக காணப்பட்டது.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அதற்கு ஆதரவான புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் போன்றவற்றின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஆறு கட்சிகளும் இந்தியாவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பின. ஆனால் அக்கடிதத்துக்கு இந்தியா இன்று வரை பதில் கூறவில்லை. கடந்த ஆண்டு இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்புக்கு வந்திருந்தார். அவர் அங்கே கூட்டமைப்பை சந்தித்தார். சந்திப்பின்போது டெலோ இயக்கத்தின் தலைவர் மேற்படி கடிதம் தொடர்பாக அவரோடு பேசியிருக்கிறார். அக்கடிதத்தை அனுப்புவதற்கான ஒருங்கிணைப்பு முயற்சிகளை அந்த இயக்கம்தான் முன்னின்று முன்னெடுத்தது. எனவே அவர் அது தொடர்பாக ஜெய்சங்கரோடு உரையாடியுள்ளார். எனினும் இந்திய மத்திய அரசாங்கம் இன்று வரையிலும் கடிதத்திற்கு பதில் கூறவில்லை.

யாழ்ப்பாணத்தில் கட்டி முடிக்கப்பட்ட பின் பல மாதங்களாக திறக்கப்படாதிருக்கும் கலாச்சார மண்டபத்தை திறப்பதற்கு இந்திய பிரதமர் மோடி கடந்த ஆண்டின் இறுதியில் இலங்கைக்கு வருவார் என்று கூறப்பட்டது. அவ்வாறு வரும்பொழுது மேற்படி ஆறு கட்சிகளின் பிரதிநிதிகளையும் அவர் சந்திக்கக்கூடும் என்று எதிர்பார்ப்பும் இருந்தது. ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. மோடியும் வரவில்லை ஆறு கட்சிகளுக்கும் பதில் கிடைக்கவில்லை. இவ்வாறு பலத்த எதிர்ப்பின் மத்தியில் ஆறு கட்சிகள் அனுப்பிய கோரிக்கைக்கு இந்தியா பதிலளித்திருக்காத ஒரு பின்னணியில், மீண்டும் அவ்வாறு இந்திய மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கைகளை முன் வைப்பதற்கு தமிழ் கட்சிகளில் அனேகமானவை தயாராக இருக்கவில்லை. சிவில் சமூகங்களும் தயாராக இருக்கவில்லை.

எனவே ஜெனிவா கூட்டத் தொடரை முன்னிட்டு இந்திய மத்திய அரசாங்கத்தை நோக்கி தமிழகத்தில் இருந்தும் பலமான கோரிக்கைகள் முன்வைக்கப்படவில்லை, ஈழத் தமிழர்கள் மத்தியில் இருந்தும் கோரிக்கைகள் முன் வைக்கப்படவில்லை.

இதனால் நடந்து முடிந்த ஜெனிவா கூட்டத் தொடரையொட்டி இந்தியாவின் நிலைப்பாட்டை மாற்றுவதற்கு சில செயற்பாட்டாளர்கள் முன்னெடுத்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

அவ்வாறு ஈழத்தமிழர்களும் தமிழகமும் இணைந்து இந்திய மத்திய அரசாங்கத்தை நோக்கிகோரிக்கைகளை முன் வைப்பதால் மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தலாமா இல்லையா என்ற விவாதம் ஒருபுறம் இருக்க, இந்திய மத்திய அரசாங்கத்தை கையாளும் விடயத்தில், தமிழக ஈழத் தரப்புகள் ஒன்றிணைந்து செயல்படுவதில் உள்ள சிக்கல்களையும் ஏமாற்றகரமான இடைவெளிகளையும் மேற்படி முயற்சிகள் நமக்கு உணர்த்துகின்றன.

இந்திய மத்திய அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு தமிழகத்தால் முடியும் என்ற ஒரு எடுகோளின் அடிப்படையில் மூத்த அரசியல் விமர்சகர் திருநாவுக்கரசு ஒரு கோட்பாட்டை முன்வைத்தார். இது நாலாங்கட்ட ஈழப்போரின் தொடக்கத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டு பகுதியில் வெளிவந்த பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. மத்திய அரசாங்கத்தை கையாள்வதற்கான திறப்பு தமிழகத்திடம் உண்டு என்ற அடிப்படையில் "புது டெல்லிக்கான திறப்பு தமிழகம்" என்று அவர் அந்த கோட்பாட்டுக்கு விளக்கம் கூறியிருந்தார். ஆனால் கடந்த ஜெனிவா கூட்டத்தொடரை முன்னிட்டு சில செயற்பாட்டாளர்கள் தன்னார்வமாக முன்னெடுத்த நிகழ்ச்சிகள் வெற்றி பெறாதது நமக்கு எதைக் காட்டுகிறது?



In Person

Over 700 positions

# Multi-Employer Job Fair

## Wednesday, Oct 19, 2022

10 am – 3 pm

### Available Positions:

- **Walmart**-Overnight Associate
- **BGIS-**Bilingual Facilities Services Coordinator
- **VHA-**PSW
- **Sunlife Financial-**Financial Advisor
- **Single Point -** Call Centre Agent
- **Paramed –** PSW, HSW, Assignment Coordinator, RN, RPN, Occupational Therapist
- **Greatway Financial** – Independent Insurance Advisor
- **InterFulfillment Inc. -** Warehouse Associate, Shipper/Receiver, Project and Inventory Coordinator, Customer Service Rep
- **YMCA Childcare -** ECE, ECA, Early Learning Facilitator, SSW, Rec & Leisure
- **Toronto Living Care Services –** PSW
- **Alpha Label Inc. –** Machine Operator
- **Primerica Financial Services –** Financial Advisor
- **Play Forever -** Afterschool Program Coordinator, Social Media Coordinator
- **Connect6 –** Call Center Rep, Events Sales Rep
- **Securiguard Inc.** – Security Guard
- **Kaizen Canadian Group** - General farm worker, Light duty cleaner, Construction trades helper and labourer
- **Hudson Bay Yorkdale** - Seasonal Sales Associate, Seasonal Support Associate
- **Financial Debt Recovery** - Collection Agent, Office Admin
- **Joriki Inc. –** Machine Opr, Forklift Opr.
- **Courtyard & Towneplace Suites** - Room Attendant, Laundry Attendant, Houseperson
- **Securitas** – Security Guard
- **Steer** – Driver
- **Burger King** – Crew Member, Cook
- **Kelly Services** – Packer, Production Line Worker
- **McDonald's** - Crew member; Kitchen crew member, Guest service crew member
- **Calvary Child and Family Services -** Child and Youth worker
- **Tony Mac -** Crew member; Kitchen crew member, Guest service crew member
- **Spotted Clothing –** Shipper, Warehouse Asst, Warehouse Manager
- **Monte Carlo Inn -** Front Desk/Night Auditor, Housekeeper
- **Tippet Richardson –** Driver (AZ, DZ, G,), Mover Helper
- **Elite Residential Concierge** – Security Guard, Concierge
- **Mampster** – Packing Associate, Dough Maker, Fryer
- **Kobay Enstel Limited** - Press Operator, Welding Operator
- **Trails Youth Initiatives** - Youth Facilitator - Outdoor Program
- **Paragon Security** – Security Guard

Please bring your **Resume and SIN Card!**

HUDSON'S BAY Walmart Sun Life Financial BGIS VHA Home HealthCare Creating More Independence COURTYARD TOWNEPLACE SUITES SINGLEPoint BURGER KING KOBAY

JORIKI BEVERAGES Securitas KELLY INTER FULFILLMENT greatway McDonald's STEER ALPHA LABEL

Toronto Living Care Services Inc. "The Standard for Caring and Service" PRIMERICA PLAY FOREVER Spotted Clothing.com CONNECT6 GROUP Securiguard

KAIZEN FDR ParaMed Redefining Care 30 TRAILS PARAGON SECURITY

**Markham Convention Centre**
2901 Markham Road, Scarborough, ON M1X 0B6
(Markham Road and McNicoll Ave.)

**Free Parking**
More info: 416-335-5490

Canada EMPLOYMENT ONTARIO Ontario

Shine On Y Greater Toronto


JOE LI
Re-Eelect
Regional Councillor
Vote: October 14-24, 2022
நிதிப் பொறுப்பு மற்றும் ஒற்றுமையுடன் சமூகத்திற்கு சேவை செய்தல்
இவரது கடந்த கால முக்கிய சாதனைகள்:
தொடர்ந்து 19 ஆண்டுகளாக மார்க்கம் நகரசபையின் விருப்ப வரவு செலவுத் திட்டத்தில் நிதிப் பொறுப்பு- பூச்சியம் டாலர்கள் செலவிடப்பட்டது. 100,000 டாலர்களுக்கு மேல் வரி செலுத்துவோரின் நிதி சேமிக்கப்பட்டது
மார்க்கம் நகர சபைக்கு உட்பட்ட பகுதியில், தானியங்கி கழிவு சேகரிப்பு அமைப்பை ஏற்று சபையின் ஒப்புதலைப் பெற்றமை
யோர்க் பிராந்திய போக்குவரத்து நிறுவனத்தின் பேருந்து தங்குமிடங்களில் புதிய போக்குவரத்து நேர திறன் அமைப்பை உருவாக்குவதற்கு ஜோ லீ அவர்கள் தலைமை தாங்கினார்
யோர்க் பிராந்திய குடிமக்கள் தங்கள் பிராந்தியத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பிரேரணையை இவரே முன்வைத்தார்.
2022-2026க்கான ஜோ லியின் பார்வை
சொத்து வரிகளை குறைவாக வைத்திருத்தல் மற்றும் நகர சபையின் தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்துதல்
லாங்ஸ்டா.்.ப் மற்றும் மார்க்கம் மேம்பாட்டு மையங்களில் தானியங்கி கழிவு சேகரிப்பு முறையை செயல்படுத்துதல்
அனைத்து மலிவு மற்றும் வாடகை வீட்டுத் திட்டங்களை விரைவாகக் கண்காணிக்கும் திட்டத்தை உருவாக்குதல்
சமூக பாதுகாப்பு முன் முயற்சிகளுக்கான ஆதாரங்களை வழங்குதல்
தேர்ந்தெடுக்கப்பட்ட யோர்க் பிராந்தியத் தலைவருக்கான ஜனநாயக செயல்முறையை மீண்டும் நிறுவுதல்
PUBLIC SAFETY
Campaign Office: 165 Gibson Dr, Markham L3R-3K7
Tel: (647) 479-8738 Website: www.joeli.ca
Email: reelectjoeli@gmail.com


VOTE SHANTA SUNDARASON
For Regional Councillor
STRONGER TOGETHER
Getting Things Done. For You!
Healthcare
Transit
Sustainability
Recreation
Read Full Platform at:
ShantaSundarason.ca
ShantaSundarason@gmail.com
(647) 389-8828
PinkCars.co
STOP THE HORNS





# மார்க்கம் நகரசபைக்கு தேர்ந்தெடுக்கப்படக் கூடிய நல்ல வேட்பாளரான தீபக் தல்ரேஜா (Deepak Talreja- Ward-8) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்



தீபக் தல்ரேஜா அவர்கள் சிறுவயதிலிருந்தே ஒரு விளையாட்டு வீரனாகத் திகழ்கின்றார். விளையாட்டு அனைவரையும் ஒன்றிணைக்கிறது மற்றும் வேறுபாடுகளைக் குறைக்க உதவுகிறது, நம்மைச் சுற்றியுள்ள பலரின் வாழ்க்கையில் பெரும் பங்கு வகிக்கிறது. மிக முக்கியமான விடயம், விளையாட்டு வீரர்கள் மற்றவர்களை கைவிட மாட்டார்கள். ஒரு சிறந்த தடகள வீரராக, பல்வேறு விளையாட்டுகளில் பல பதக்கங்கள் மற்றும் உலகக் கோப்பைகளில் வெற்றி பெற்றுள்ள இவர் ஒரு மனித நேயமிக்க ஒருவர்.

சிட்னி நோவா ஸ்கோசியாவில் சிட்னி நகரில் உள்ள கேப் பிரெட்டன் பல்கலைக்கழகத்திற்கான மாணவர் சங்க சர்வதேச மாணவர் ஆலோசகராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் எமது வேட்பாளர் தீபக் தல்ரேஜா அவர்கள். அத்துடன் அவர் பல்வேறு இலாப நோக்கற்ற மற்றும் தன்னார்வ நிறுவனங்களில் தலைமைப் பாத்திரங்களில் பணியாற்றி வருகின்றார்.

மேலும், தீபக் தல்ரேஜா அவர்கள கடந்த பத்து ஆண்டுகளாக யோர்க் பிராந்திய காவல்துறையில் ஒரு சிறப்பு நிகழ்வுகள் மற்றும் சின்னமாக தன்னார்வத் தொண்டு செய்து வருகின்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்குத.

**நல்ல வேட்பாளரான தீபக் தல்ரேஜா (Deepak Talreja- Ward-8 Markham Council) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்**

அவரது தொலைபேசி இலக்கம்: **(416) 452-0206**

**REGISTER TO CONFIRM YOUR VOTER IDENTIFICATION NUMBER :**

1.) Confirm the accuracy of the information.
2.) Update your residence address information.
3.) Add your name to the Municipal Voters List.



# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL-2022

உதயன் விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards 2022

**Title Sponsor**

TEAM BLUE FORCE
teamblueforce.ca
RE/MAX REALTRON BLUE FORCE 416 333 6660

**Presented by**

VIBRANT HOSPITALITY GROUP
விழா சிறப்புற நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்
Managing and Developing Hospitality Sector for More than 25 Years
Shankar Nallathamby, CHA (Director)
416 270 4343 - shankar@vhgcanada.com

**Powered by**

MAHAANS
5635 Finch Ave E
Unit# 5, Toronto, ON
M1B 5K9, Canada
+1 (647) 704-4597
பாரம்பரிய முறைப்படி மரசெக்கில் தயாரிக்கப்பட்ட நல்லெண்ணை, தேங்காய் எண்ணை, கடலை எண்ணை இங்கு கிடைக்கும்.

## 16 வது ஆண்டில்

## கனடா உதயன் சர்வதேச விருது விழா

உலகெங்கும் பேசப்படும் இவ்வருட விழாவில் வழங்கப் பெறவுள்ள

**உதயன் விருதுகளின் பட்டியல்**

- UTHAYAN LITERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
- UTHAYAN INTER-COMMUNAL RELATIONSHIP AWARD
- UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - ONTARIO
- UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - QUEBEC
- UTHAYAN LEADERSHIP AWARD
- UTHAYAN YOUTH ICON AWARD
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD - SRI LANKA
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD - TAMIL NADU

விருது வழங்கலும் இராசப்போசன விருந்தும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

## 'Rhythm of Rishi'

**Veenai isai** வீணை இசை

**Saturday October 15th, 2022 at 6.00 pm**

**Co-Presented by**

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...
Tasty தமிழா ™

இவ்விழா நடைபெறும் மண்டபம்

**Kennedy Convention Centre**
1199 Kennedy Rd, Scarborough, ON M1P 2L2
(Kennedy & Lawrence Inter-section)

**For More Information, call 416 732 1608 or 647 762 9512**

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# பருத்தித்தீவின் விலகாத மர்ம ஆச்சரியங்கள் : பகுதி 2

## ஆபத்துக்கள் நிறைந்த துணிச்சலான தனது பயணம் பற்றி : யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்


பிரதேச செயலகம், தீவகம் வடக்கு - ஊர்காவற்றுறை
Divisional Secretariat, Islands North – Kayts

பருத்தித்தீவு மீள்குடியேற்றம் தொடர்பானது

பிரதேச செயலாளர்,

MANCHULADEVI SATHEESAN
DIVISIONAL SECRETARY
ISLANDS NORTH
KAYTS

பருத்தித்தீவின் விலகாத மர்மத்தில் 1990 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த 11 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் எங்கே? அவ்வாறானால் இந்த தீவிலுள்ள நிலங்கள் யாருக்குச் சொந்தம் என்ற நீண்ட தேடுதலை மேலும் மேற்கொண்டபோது அதிலும் பல ஆச்சரியமான தகவல்கள் வெளிவந்தன.

பருத்தித்தீவை தோண்டாமல் பருத்தித்தீவு தொடர்பில் தோண்டவே பல ஆக்கங்களை உருவாக்கும் அளவிற்கு விடயங்கள் வெளிவருகின்றன. 240 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இந்த பருத்தித்தீவில் 1959 ஆம் ஆண்டு முதல் வாழ்ந்த 11 குடும்பங்களைச் சேர்ந்த மக்களிற்கு 1961, 1969 ஆம் ஆண்டு முதல் அரசினால் காணி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும் 1975-05-18 அன்று 60 ஆம் இலக்கத்தில் வன ஜீவராசிகள் திணைக்களம் அந்த தீவு முழுவதும் தமக்குச் சொந்தம் என வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை அங்கே வாழ்ந்த 11 குடும்பங்களின் ஒப்புதல் இன்றி பிரசுரித்தமையே போர் முடிந்து 13 ஆண்டுகள் கடந்தும் அந்த மக்கள் மீளக் குடியமர முடியா-மல் தவிப்பதற்குக் காரணமாகவுள்ளது.



இவ்வாறு வர்த்தமானி வெளிவந்த பின்பும் 11 குடும்பங்களும் அங்கேயே வாழ்ந்தனர். ஆனால் இலங்கையில் நிலவிய உள்நாட்டு யுத்தம் காரணமாக 1990ஆம் ஆண்டு யூன் மாதம் அனைத்துக் குடும்பங்களும் அங்கிருந்து வெளியேறி எழுவை தீவு மற்றும் யாழ் நகரிற்குச் சென்று விட்டனர்.

அவ்வகையில் இடம்பெயர்ந்த மக்கள் தம்மை தமது சொந்த தீவிற்கு அனுமதிக்குமாறு 1997 ஆம் ஆண்டு முதல் கோரிக்கை விடுத்தபோதும் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. இதேநேரம் 2002 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் நிறுத்தக் காலத்திலும் கோரிக்கை விடுத்தும் அதுவும் பலனளிக்காத நிலையில் அப்போது இலங்கையில் பணியில் இருந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் அங்கே வாழ்ந்த மக்கள் முறையிட்டனர். அதன் பயனாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முயற்சியால் அந்த மக்கள் அங்கே ஒரு தடவை அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.




இதன் பின்பு 2006 இல் மீண்டும் போர் தொடங்கி 2009 இல் முடிவுற்ற பின்னர் 2010 ஆம் ஆண்டு முதல் அந்த தீவில் குடியமர 11 குடும்பங்களும் முயன்ற சமயம் ஆரம்பத்தில் கடற்படையினர் அதற்கு அனுமதி மறுத்தனர். அதன் பின்பு கடற்படையினர் அந்த தீவை விட்டு முழுமையாக வெளியேறி விட்டனர். இருந்தபோதும் பாதுகாப்பு காரணங்கள் காட்டி சில ஆண்டுகள் மீள்குடியேற்றம் தடுக்கப்பட்டது. அதன் பின்பு அந்த மக்கள் மீள்குடியேற முயன்றபோது வன ஜீவராசிகள் திணைக்களம் தனது வர்த்தமானி அறிவித்தலைப் பயன்படுத்தியே மீள் குடியேற்றத்தை தடுத்து வந்தனர். தற்போதும் தடுத்து வருகின்றனர்.

இதனால் அங்கே வாழ்ந்த மக்கள் பிரதேச செயலகம், மாவட்ட செயலகம், வடக்கு மாகாண ஆளுநர் என பல விண்ணப்பங்களைச் செய்து அலைந்து திரிந்த நிலையில் பல கூட்டங்கள் இடம்பெற்று இறுதியாக 2021-02-08 அன்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமைய பருத்தித்தீவில் வாழ்ந்த 11 குடும்பங்களையும் பிரதேச செயலாளர் ஆவணங்களுடன் உறுதிப்படுத்த அந்த குடும்பங்களை அங்கே குடியமர அனுமதிப்பதாக வன ஜீவராசிகள் திணைக்களம் இணக்கம் தெரிவித்தது.

இந்த தீர்மானத்தின் பிரகாரம் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு 2021-03-02 இல் உறுதிப்படுத்தல் ஆவணம் சகிதம் கடிதம் எழுதியுள்ளார். இருந்தபோதும் அந்த 11 குடும்பங்களும் மீள் குடியமர இன்றுவரை அனுமதிக்கப்படவில்லை. தற்போது பருத்தித்தீவில் ஒரேயொரு வீடு அமைத்து குடியேறியுள்ள ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எழுவைதீவு வட்டார உறுப்பினரின் தந்தையும் தீவில் வாழ்ந்த 11பேரில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சுமார் 240 ஏக்கர் பரப்பளவைக்கொண்ட பருத்தித்தீவில் வாழ்ந்த 11 குடும்பத்திற்கும் தலா ஒரு ஏக்கர், ஆலயம் பாதை என சுமார் 15 ஏக்கர் நிலப்பரப்பு மக்களின் உரித்தாகவும் எஞ்சிய 225 ஏக்கரும் வன ஜீவராசிகள் திணைக்களத்தாலும் உரிமைகோரும் நிலையில் இன்றுவரை விலகாத பல மர்ம ஆச்சரியங்கள் கொண்ட தீவாகவே காணப்படுகின்றது. பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தும் ஆவணத்தில்-காணி அனுமதிப் பத்திரம் மட்டுமன்றி 1982 ஆம் ஆண்டு நில அளவை செய்யப்பட்ட வரைபடத்துடன் இந்த 11 குடும்பங்களின் விபரமும் முழுமையாக இணைக்கப்பட்டுள்ளமை மேலும் ஒரு சான்றாக அமைகின்றது.

இவ்வாறு காணப்படும் சுமார் ஒரு சதுரக் கிலோ மீற்றர் பரப்பை கொண்ட பருத்தித்தீவில் வாழ்ந்த மிக்கேல்பிள்ளை மரியதாஸ், வயது 70, இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், "எனக்கு 7 பிள்ளைகள் இவர்களில் நால்வர் அந்த தீவில் வசித்த காலத்திலும் எழுவை தீவிற்கு இடம்பெயர்ந்த பின்னர் 3 பிள்ளைகளுமாக 7 பிள்ளைகளுடன் பெரும் சிரமத்துடன் வாழ்வதோடு எமது காணியும் கடற்றொழில் செய்வதற்கு ஏற்ற வளமான பிரதேசத்தில் எப்போது மீண்டும் குடியேறுவோம் என்ற ஆவலுடனேயே காலத்தை கழிக்கின்றோம். பிள்ளைகளுடன் எழுவை தீவில் இரு இடத்தில் 7 பரப்பு காணி இருந்தாலும் அதிலும் 4 பரப்பு காணி கடற்படை வசம்தான் உள்ளது. எஞ்சிய 3 பரப்புக் காணியிலேயே வாழ்வாதாரத்தை நடாத்துகின்றோம். தற்போது இருக்கும் 3 பரப்பு காணியும் மிகவும் பள்ளமான காணியாகும் இந்தக் காணியை நம்பியே தற்போதும் 3 பிள்ளைகளும் நானும் மனைவியும் வாழ்வதனால் எனது காலத்தில் அந்த பருத்தித்தீவிற்கு போவதே எதிர்பார்ப்பு" என்றார்.


நில அளவையாளர் நாயகத்தால் 1983.04.22 திகதியன்று P.PLAN (யக்) 1600 இலக்க வரைபடத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பருத்தித்தீவு காணி உரிமையாளர் விபரம்

1. - 635993243V
முகவரி : யாழ்ப்பாணம்
காணித்துண்டு இலக்கம் : 11
காணி பரப்பளவு : 0.404ha/1ஏக்கர்

2. 441786171V
முகவரி : 4ம் வட்டாரம், எழுவைதீவு ஊர்காவற்றுறை
காணித்துண்டு இலக்கம் : 12
காணி பரப்பளவு : 0.145ha/1 1/4ஏக்கர்

3. முகவரி : யாழ்ப்பாணம்
காணித்துண்டு இலக்கம் : 13
காணி பரப்பளவு : 0.202ha/ 1/2ஏக்கர்

4. முகவரி : 3ம் வட்டாரம், எழுவைதீவு ஊர்காவற்றுறை
காணித்துண்டு இலக்கம் : 14
காணி பரப்பளவு : 0.173ha/ 1/4ஏக்கர்

5. 196928800455V
முகவரி : 3ம் வட்டாரம், எழுவைதீவு ஊர்காவற்றுறை
காணித்துண்டு இலக்கம் : 15
காணி பரப்பளவு : 0.173ha/ 1/4ஏக்கர்

6. 603402049V
முகவரி : ஊர்காவற்றுறை
காணித்துண்டு இலக்கம் : 16
காணி பரப்பளவு : 0.331ha/ 3/4ஏக்கர்

Scanned with CamScanner

7. 197633903763
முகவரி : 4ம் வட்டாரம், எழுவைதீவு ஊர்காவற்றுறை
காணித்துண்டு இலக்கம் : 17
காணி பரப்பளவு : 0.165ha/ 1/4ஏக்கர்
(776275271V)

8. 791634504V
முகவரி : 5ம் வட்டாரம், எழுவைதீவு ஊர்காவற்றுறை
தொலைபேசி இலக்கம் : 0773280703
காணித்துண்டு இலக்கம் : 18
காணி பரப்பளவு : 0.359ha/ 3/4ஏக்கர்

9. 512063063V
முகவரி : 3ம் வட்டாரம், எழுவைதீவு ஊர்காவற்றுறை
தொலைபேசி இலக்கம் : 0773280703
காணித்துண்டு இலக்கம் : 19
காணி பரப்பளவு : 0.347ha/ 3/4ஏக்கர்

10. 643374749V
முகவரி : 3ம் வட்டாரம், எழுவைதீவு ஊர்காவற்றுறை
தொலைபேசி இலக்கம் :
காணித்துண்டு இலக்கம் : 20
காணி பரப்பளவு : 0.758ha/ 3/4ஏக்கர்

11. 532112389V
முகவரி : 5ம் வட்டாரம், எழுவைதீவு ஊர்காவற்றுறை
தொலைபேசி இலக்கம் : 0760445113
காணித்துண்டு இலக்கம் : 21
காணி பரப்பளவு : 0.629ha/ 3/4ஏக்கர்


அதேவேளை இதே எழுவைதீவில் வசிக்கும் பருத்தித்தீவைச் சேர்ந்த தாயார் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், "பருத்தித்தீவில் நான் 14 ஆண்டுகள் வாழ்ந்தேன். அந்த தீவிலே நாமே தொழில் செய்து உற்பத்தியை விற்பனைக்கு கொண்டு சென்று திரும்பி வரும்போது தேவையானவற்றையும் கொள்வனவு செய்து வருவோம். மிகவும் சந்தோசமான வாழ்க்கை நடாத்திய தீவை இன்று எம்மால் பார்க்கவும் முடியவில்லை. ஆனால் அந்த தீவின் வரும்படியை யாரோ எடுக்கின்றனர். எனது கணவர் பிள்ளைகள் உறவுகள் தொழில் செய்த கடலிற்கு நாம் போக முடியாதாம் ஆனால் எவரோ எல்லாம் வந்து சீனாக்காரனை கூட்டிவந்து கடலட்டை வளர்க்கிறார்கள். பெண்ணாக இருந்தபோதும் சிறுவயது முதலே வலை தெரிவிற்கு செல்வதோடு பாடசாலைக்குப் படகில் சென்று வந்தேன். இந்த இனிமையான காலம் இனி எமக்கு இல்லை என்றதை நினைத்தே எனது கணவரின் உயிரும் போய்விட்டது நானும் எவ்வளவு காலமோ தெரி-யாது பொமிற்றைத்தான் பொத்திப் பொத்தி வைத்திருக்கிறன்" எனத் தெரிவித்து கண் கலங்கி நின்றார்.

# "இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு மைய குடியிருப்புகள் திட்டத்தில் ஊழல்" சீமான் குற்றச்சாட்டு

" வேலூர் மாவட்டம் மேல்மொனவூரில் ஈழச்சொந்தங்களுக்குப் புதிதாகக் கட்டப்படும் குடியிருப்புகள் தரமற்றதாகக் கட்டப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்தி, உறுதிமிக்கத் தரமான வீடுகள் கட்டப்படுவதை உறுதிசெய்ய வேண்டுமென வலியுறுத்துகிறேன்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: "வேலூர் மாவட்டம், மேல்மொனவூரில் தொப்புள்கொடி உறவுகளான ஈழத் தமிழர்கள் மறுவாழ்வு மையத்தில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகள் சிறிதும் தரமற்றதாக இருப்பது அதிர்ச்சியையும், கடும் ஆத்திரத்தையும் ஏற்படுத்துகிறது.

நம்பிக்கையோடு நம்மை நாடி வந்த நம் ரத்தச் சொந்தங்கள் என்ற உணர்வு அணுவளவுமின்றி, வாழ வழியற்று வந்த அகதிகள்தானே என்ற அலட்சிய மனப்பான்மையே, தரமற்ற வீடுகளைக் கட்ட அனுமதித்ததற்கு முக்கியக் காரணமாகும். ஆடு, மாடுகளை அடைக்கும் பட்டிகளைவிட மிக மோசமான முறையில் குடியிருப்புகள் கட்டப்படுவதைக் கைகட்டி வேடிக்கை பார்க்கும் தமிழ்நாடு அரசின் சிறிதும் மனசான்றற்ற கொடும்போக்கு வன்மையான கண்டனத்திற்குரியது. மேல்மொனவூர் ஈழத்தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் ஈழச்சொந்தங்களுக்காக 'முதலமைச்சர் இலவசத் தொகுப்பு வீடுகள்' என்ற பெயரில் ரூ.11 கோடி ரூபாய் செலவில் 220 வீடுகள் கட்டும் திட்டத்தினை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தமிழக முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

ஆனால், வீடுகள் கட்டுவதற்கான ஒப்பந்தத்தைப் பெற்ற கட்டுமான நிறுவனங்கள் வீடுகளை முற்றிலும் தரமற்ற முறையில் கட்டி வருவதாக



முகாம்களில் வசிக்கும் மக்களே குற்றஞ்சாட்டினர். இதையடுத்து நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர்கள் கட்டுமானம் நடைபெறும் இடத்திற்கே நேரடியாகச் சென்று மேற்கொண்ட கள ஆய்வில், அடித்தளம் ஆழமாக அமைக்கப்படாததும், சிமெண்ட் கலவையில் அதிகளவு மலைமணல் கலக்கப்படுவதும், கான்கிரீட் தூண்கள் ஏதுமின்றிப் பாதுகாப்பற்ற வகையில் வீடுகள் கட்டப்படுகின்றன என்ற அதிர்ச்சியளிக்கும் உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்தன.இது குறித்துத் தொடர்புடைய ஒப்பந்ததாரர்களிடம் நாம் தமிழர் கட்சியினர் எழுப்பிய கேள்விகளுக்கு உரிய விளக்கமளிக்காமல், தங்களது செல்வாக்கைப் பயன்படுத்தி, காவல் துறையினர் மூலம் கட்டுமான முறைகேடுகளை அம்பலப்படுத்திய நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர்களையே கைது செய்தது எதேச்சதிகாரபோக்கின் உச்சமாகும்.

முதலமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்டுத் தொடங்கப்பட்ட திட்டத்திலேயே ஊழல் புரியுமளவுக்கு மிகப்பெரிய மோசடியில் ஈடுபட்டுள்ள கட்டுமான நிறுவனங்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், அவர்களின் முறைகேடுகளுக்குத் துணைபோகும் திமுக அரசின் செயல், கட்டுமான ஊழலில் ஆளுங்கட்சியினருக்கும் தொடர்பு இருக்குமோ என்ற ஐயத்தை ஈழத்தமிழ் சொந்தங்களிடம் ஏற்படுத்தியுள்ளது.நாடு இழந்து, வீடு இழந்து, மண்ணையும், மக்களையும், ஊரையும், உறவுகளையும், உடைமைகளையும் இழந்து நிம்மதியாக உயிர்வாழ இந்தப் பூமிப் பந்தில் ஓர் இடம் கிடைத்திடாதா என்ற எதிர்பார்ப்புகளுடன், இன்னொரு தாய் நிலமான தமிழ்நாட்டிற்கு நம்மை நம்பி வந்த ஈழச்சொந்தங்கள், முகாம்கள் என்ற பெயரில் சிறையைவிடக் கொடுமையான எவ்வித அடிப்படை வசதியுமற்ற வதைக்கூடங்களில் ஒரு தலைமுறைக்கும் மேலாக வாடிவருகின்றனர்.

இந்த நாட்டிற்குச் சிறிதும் தொடர்பில்லாத திபெத்தியர்களுக்கு வளமான வாழ்வை இந்தியப் பெருநாடு அமைத்துக் கொடுத்துள்ளது. தமிழர்களுக்குச் சிறிதும் தொடர்பில்லாத ஐரோப்பிய நாடுகள்கூட ஈழத் தமிழ்ச்சொந்தங்களைத் தங்கள் சொந்த நாட்டுக் குடிமக்களைப்போல அரவணைத்து, ஆதரித்து வாழ வைக்கின்றன. ஆனால் தாய்த்தமிழகத்தைத் தங்கள் சொந்த வீடென நம்பி வந்த உறவுகளுக்கு, இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாடு அரசு கட்டித் தரப்போவதாகக் கூறிய குடியிருப்புகளில் கூட ஊழல் புரிவதென்பது வெட்கக்கேடானதாகும்.

ஆகவே, மேல்மொனவூரில் ஈழச்சொந்தங்களுக்குப் புதிதாகக் கட்டப்படும் குடியிருப்புகள் தரமற்றதாகக் கட்டப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்தி, உறுதிமிக்கத் தரமான வீடுகள் கட்டப்படுவதை உறுதிசெய்ய வேண்டுமென வலியுறுத்துகிறேன். மேலும், முறைகேடுகளில் ஈடுபட்ட கட்டுமான நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்து, ஒப்பந்ததாரர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாக தமிழ்நாடு அரசினைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

# இந்து மதம் குறித்து அவதூறாக பேசியதாக ஆ.ராசா மீது நடவடிக்கை கோரி உயர் நீதிமன்றத்தில் மனு

இந்து மதம் மற்றும் இந்துக்கள் குறித்து அவதூறாக பேசியதாக திமுக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.கடந்த செப்டம்பர் மாதம் 6ம் தேதி சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில்




பேசிய முன்னாள் மத்திய அமைச்சரும், திமுக துணை பொதுச் செயலாளருமான ஆ.ராசா இந்து மதம் மற்றும் இந்து பெண்கள் குறித்து பேசிய கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த விவகாரம் தொடர்பாக ஆ.ராசா மீது நடவடிக்கை எடுக்கக் கோரி ஜெ.ஜெ. கட்சியின் நிறுவனர் ஜோசப் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.அந்த மனுவில், "ஆ.ராசாவின் பேச்சு இரு மதத்திற்கு இடையே விரோதத்தை ஏற்படுத்தி , மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் உள்ளது. ராசாவின் பேச்சால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. வழக்கத்தில் இல்லாத மனு நூல் குறித்து பேசி தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்திய ராசா மீது நடவடிக்கை எடுக்கக் கோரி வேப்பேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். ஆனால், ஆளும் கட்சியின் முக்கிய பொறுப்பில் இருப்பதால் அவர் மீதான புகாரை காவல் துறையினர் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே எனது புகாரின் பேரில் ஆ.ராசா மீது வழக்குப் பதிவு செய்ய காவல் துறைக்கு உத்தரவிட வேண்டும்" என்று மனுவில் கோரியிருந்தார்.இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நளினி, ரவிச்சந்திரன் விடுதலை கோரிய வழக்கில் நீதிமன்ற உத்தரவுக்கு அரசு கட்டுப்படும் : தமிழக அரசு பதில் மனு



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருந்து வரும் தங்களை விடுதலை செய்யக் கோரி நளினி, ரவிச்சந்திரன் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு வழக்கில் தமிழக அரசு பதில் மனு தாக்கல் செய்துள்ளது.முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருந்த 7 பேரில் ஒருவரான பேரறிவாளனை கடந்த மே மாதம் 18ம் தேதி உச்ச நீதிமன்றம் விடுதலை செய்து உத்தரவிட்டது.

உச்ச நீதிமன்றம் தனது தனிப்பட்ட அதிகாரமான சட்டப்பிரிவு 142ஐ பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்தது; பேரறிவாளன் விடுதலையைத் தொடர்ந்து இந்த வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் மற்ற 6 பேரும் விடுதலை கோர சட்ட வழிவகை ஏற்பட்டது.இந்நிலையில், கடந்த ஆகஸ்ட் மாதம் நளினி மற்றும் ரவிச்சந்திரன் இருவரும் தனித்தனியே உச்ச நீதிமன்றத்தில் தங்களை விடுதலை செய்யக் கோரி மனு தாக்கல் செய்தனர். இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், மனு தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கில் தமிழக அரசு சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், "இந்த வழக்கில் சிறையில் இருந்த ரவிச்சந்திரனுக்கு தமிழக அரசு காலவரையற்ற பரோல் வழங்கியுள்ளது. இதனால் அவர் தற்போது அவரது உறவினர் வீட்டில் உள்ளார். அதேபோல நளினிக்கும் கடந்த 27.12.2021 முதல் விடுப்பு வழங்கப்பட்டுள்ளது. ராஜீவ் காந்தி கொலை குற்றவாளிகளை விடுதலை செய்யக்கோரி தமிழக அமைச்சரவை எடுத்த முடிவின் மீது ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் காலம் தாழ்த்தியதை கருத்தில் கொண்டு ஏற்கெனவே இந்த வழக்கில் சிறையில் இருந்த பேரறிவாளன் உச்சநீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார். எனவே இந்த விவகாரத்தில் நீதிமன்றம் எந்த உத்தரவு பிறப்பித்தாலும் தமிழக அரசு அதற்கு கட்டுப்படும்.

குறிப்பாக, ஆளுநர் தனது தனிப்பட்ட அதிகாரமான அரசியலமைப்பு சட்டப்பிரிவு 161 ன் கீழ் எடுக்கும் முடிவில் ஒருசில காரணத்தில் நீதிமன்றம் தலையிட முடியும் என உச்ச நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் சுட்டிக்காட்டியுள்ளது.குறிப்பாக அரசியல்சாசன பிரிவு 161ஐ பயன்படுத்தி ஆளுநர் முடிவெடுக்காமல் இருந்தால் அதில் நீதிமன்றம் தலையிட முடியும் என்பதை ஆந்திராவின் "இப்ரு சுதாகர்" என்பவரது வழக்கில் உறுதி செய்துள்ளது. விடுதலை செய்ய அமைச்சரவை முடிவெடுத்த பின்னரும், அதன்மீது ஒப்புதல் அளிக்காமல் அதீத காலம் தாழ்த்துதல் என்பதையும், அதனால் கைதிக்கு ஏற்படும் மனநல பாதிப்பையும் சுட்டிக்காட்டி நீதிமன்றம் சிறைக் கைதியை விடுவித்துள்ளது.

அது ராஜீவ் காந்தி கொலை குற்றவாளிகளுக்கும் பொருந்தும். ஏனெனில் ஏழு பேர் விடுதலை தொடர்பாக தமிழக அரசின் பரிந்துரையை ஆளுநருக்கு அனுப்பி வைத்ததும் அதன் மீது இரண்டரை ஆண்டுகள் எந்த முடிவும் எடுக்காமல் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் அதனை குடியரசு தலைவருக்கு தமிழக ஆளுநர் அனுப்பி வைத்திருந்தார். அந்த தீர்மானத்தின் மீது ஒரு வருடம் 9 மாதங்களாக குடியரசுத் தலைவர் எந்த முடிவும் எடுக்காமல் இருக்கிறார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று சிறையில் இருந்துவரும் ராபர்ட் பயஸ் மற்றும் சாந்தன் ஆகியோரும் பேரறிவாளன் வழக்கை சுட்டிக்காட்டி தங்களை விடுதலை செய்யக் கோரி உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 22ஆவது வருடமாக நடத்தும்**

**திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு**

**நடைபெறும் திருமுறை விழா**

**சிறார்களுக்கான போட்டிகள்**



## பேச்சுப் போட்டி

நவம்பர் 12, 2022 சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

**இடம்: ஆத்மஜோதி இல்லம், 1473 BIRCHMOUNT ROAD, (Birchmount & Ellesmere)**

கீழ்ப்பிரிவு: 31-10-2013 - 1-10-2016 க்கும் இடைப்பட்டவர்கள்
மத்தியபிரிவு: 31-10-2010 - 1-10-2013 க்கும் இடைப்பட்டவர்கள்
மேற்பிரிவு: 31-10-2006 - 1-10-2010 க்கும் இடைப்பட்டவர்கள்

**பேச்சுப் போட்டி விடயங்களை**
**விண்ணப்படிவத்துடன் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.**

## மாதிரி விண்ணப்பப்படிவம்

1. முழுப் பெயர்: ..................
2. பிரிவு:..................
3. பிறந்த திகதி:..................
4. தொலை பேசி இலக்கம்: ..................
5. முகவரி: ..................

..................
ஒப்பம்

**விண்ணப்பக் கட்டணம் போட்டி ஒன்றுக்கு 10 டொலர்**
**விண்ணப்ப முடிவுத் திகதி ஒக்டோபர் 31, 2022**

**தொடர்புகளுக்கு**
Siva. Muthulingam
Arthmajothy Illam
1473, Birchmount Road
Scarborough, ON. M1P 2G4

விண்ணப்பப் படிவமும் மனனம் பண்ணும்
பேச்சுப் போட்டிக்குரிய விடயமும் கிடைக்கும் இடம்
**முருகன் புத்தகசாலை,**
GTA MALL, 5215 Finch Ave. E., Unit #123 **416-321-0285**
**ஆத்மஜோதி இல்லம்** 1473 BIRCHMOUNT ROAD
416-724-6240

சகல போட்டிகளிலும் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும். 1ஆம் 2ஆம் 3ஆம் இடம் பெறும் மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பங்கு பற்றும் சகல மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 416-724-6240**
**416-278-7445**

**ஒன்ராறியோ**
**இந்து சமயப் பேரவை, கனடா**



மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 22ஆவது வருடமாக நடத்தும்**

**திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு**

**நடைபெறும் திருமுறை விழா**

**சிறார்களுக்கான போட்டிகள்**



## திருமுறை மனனப் போட்டி

நவம்பர் 13, 2022 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

**இடம்: ஆத்மஜோதி இல்லம், 1473 BIRCHMOUNT ROAD, (Birchmount & Ellesmere)**

பாலர்பிரிவு: 31-10-2016 ஆம் திகதியும் அதன் பின் பிறந்தவர்களும்
கீழ்ப்பிரிவு: 31-10-2013 - 1-10-2016 க்கும் இடைப்பட்டவர்கள்
மத்தியபிரிவு: 31-10-2010 - 1-10-2013 க்கும் இடைப்பட்டவர்கள்
மேற்பிரிவு: 31-10-2006 - 1-10-2010 க்கும் இடைப்பட்டவர்கள்

**பயன்தர வல்ல திருமுறைப்பாக்கள் என்ற திருமுறை புத்தகத்தை**
**ஆத்மஜோதி இல்லத்திலும்**
**முருகன் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

## மாதிரி விண்ணப்பப்படிவம்

1. முழுப் பெயர்: ..................
2. பிரிவு:..................
3. பிறந்த திகதி:..................
4. தொலை பேசி இலக்கம்: ..................
5. முகவரி: ..................

..................
ஒப்பம்

**விண்ணப்பக் கட்டணம் போட்டி ஒன்றுக்கு 10 டொலர்**
**விண்ணப்ப முடிவுத் திகதி ஒக்டோபர் 31, 2022**

**தொடர்புகளுக்கு**
Siva. Muthulingam
Arthmajothy Illam
1473, Birchmount Road
Scarborough, ON. M1P 2G4

விண்ணப்பப் படிவமும் மனனம் பண்ணும்
திருமுறை விபரமும் கிடைக்கும் இடமும் கையளிக்கும் இடமும்
**முருகன் புத்தகசாலை,**
GTA MALL, 5215 Finch Ave. E., Unit #123 **416-321-0285**
**ஆத்மஜோதி இல்லம்** 1473 BIRCHMOUNT ROAD
416-724-6240

சகல போட்டிகளிலும் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும். 1ஆம் 2ஆம் 3ஆம் இடம் பெறும் மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பங்கு பற்றும் சகல மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 416-724-6240**
**416-278-7445**

**ஒன்ராறியோ**
**இந்து சமயப் பேரவை, கனடா**



# மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கு ஒன்ராறியோ அரசு திட்டமொன்றை வகுத்துள்ளது.

- விளையாட்டுகள், கழகங்கள் மற்றும் வெளிக்களப் பயணங்கள் ஆகியவற்றுடன் மாணவர்களுக்கான வகுப்பறைக் கற்றலை மீண்டும் ஆரம்பித்தல்.
- மாணவர்கள் கற்பதில் ஏற்பட்டுள்ள இடைவெளியினை நிரவுவதற்கு உறுதுணையாக புதிய கற்பித்தல் வழிமுறைகளை ஏற்படுத்துதல்.
- எதிர்கால வேலைகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தல்.
- பள்ளிகளைக் கட்டுவதற்கும் கல்வியை மேம்படுத்துவதற்கும் மேலதிக பணத்தை ஒதுக்குதல்.
- மாணவர்களின் உளநலனுக்கு உறுதுணையா னசெயற்பாடுகளை விரிவுபடுத்தல்.

**Ontario.ca/CatchUp எனும் தளத்தில் எமது திட்டத்தினைப் பார்வையிடலாம்.**

இது ஒன்ராறியோ அரசாங்கத்தினால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

# பிரம்படி படுகொலைகள்: 35 ஆம் ஆண்டு நினைவுகூரல்

- எமது யாழ் செய்தியாளர்



**யா**ழ்ப்பாணம் கொக்குவில் பிரம்படிப் பகுதியில் 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட பொது மக்கள் அந்த இடத்தில் இன்று நினைவு கூரப்பட்டனர்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து நடைமுறைப்படுத்தும் நோக்கில், இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியில் பெருமளவிலான இந்திய இராணுவத்தினர் இறக்கப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியாவின் வடக்கு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் தமிழ் மொழி, தமிழ் கலாசாரம் ஆகியவை குறித்த புரிதல் இல்லாதவர்களாக இருந்தார்கள்.

எனவே "அமைதியைக் காக்க" என்று வந்த இந்தியப் படைகளுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே பெரும் விரிசலும் மனக்கசப்பும் ஏற்பட்டன. எந்த தமிழர்களை காப்பாற்றவென்று வந்த இந்தியப் படை, அவர்களுடனேயே மோதும் சூழலும் ஏற்பட்டது. போராளிக் குழுக்களுக்கு தமிழ் மக்கள் ஆதரவளிப்பது இந்தியப் படைகளுக்கு ஏற்புடையதாக இல்லை என்று தொடர்ச்சியான குற்றச்சாட்டு எழுந்தது.

இதையடுத்து இரு தரப்பிற்கும் இடையே மோதல் போக்கு அதிகரித்தது. தமிழர்கள் எங்கு கூடி நின்றாலும் அவர்களை ஆயுததாரிகளாகவோ போராளிக் குழுக்களிற்கு ஆதாரவளிப்பவர்களாகவோ இந்தியப் படைகளால் பார்க்கப்பட்டனர் அந்தக் காலத்தில் அவற்றை நேரில் கூறுகின்றனர்.

அவ்வகையில் பிரம்படியில் இடம்பெற்ற படுகொலைகள் எக்காலத்திற்கும் இரத்தக்கரைப் படிந்தவை. தமிழர்கள் மனதில் என்றும் ஆறாத வடுவாக நிலைத்திருப்பவை.

1987-10-12 அன்று பிரம்படியில் இந்திய இராணுவத்தினர் யுத்த டாங்கிளால் சுட்டும் டாங்கிகளை ஏற்றியும் படுகொலை செய்த 52 அப்பாவிப் பொது மக்களின் 35ஆம் ஆண்டு நினைவு தினம் இவர்கள் ஞாபகார்த்தமாக தூபி அமைக்கப்பட்ட இடத்தில் இன்று காலை (12 அக்டோபர்) அனுஸ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவுகள், கிராம மக்கள் ஆகியோருடன் அந்த துயரச் சம்பவத்தை கண்ணுற்றவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டதோடு உயிர் நீத்த உறவுகளின் நினைவாக சுடரேற்றி மலர் தூபி அஞ்சலி செலுத்தினர்.

இதேநேரம் தியாக தீபம் திலீபனின் நினைவு தினத்தை நினைவு கூற முட்டி மோதிய அரசியல் கட்சிகளோ அல்லது ஏற்பாட்டாளர்களோ எவருமே இங்கே பிரசன்னமாகவில்லை என்பது தொடர்பில் கலந்துகொண்டவர்கள் கவலை தெரிவித்தனர்.

# வலி. வடக்கு ஆகிரமிப்பு காணிகளை முழுமையாக சுவீகரிக்க இரகசிய நடவடிக்கை

- எமது யாழ் செய்தியாளர்


**கொ**ழும்பிலிருந்து வந்த உத்தரவொன்றை அடுத்து தமிழ் மக்களின் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை அரசுடைமையாக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் வலி வடக்கில் இராணுவத்தினர் வசம் உள்ள மக்களிற்குச் சொந்தமான நிலங்களை முழுமையாக சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காணி அமைச்சின் மேலதிக செயலாளர் எழுத்தில் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வலி வடக்குப் பகுதியில் தற்போதும் 2 ஆயிரத்து 467 ஏக்கர் நிலம் படையினர் வசம் உள்ளது. இதில் இராணுவத்திற்கு ஆயிரத்து 614 ஏக்கரையும் அளவீடு செய்யுமாறு 2022-09-23 காணி அமைச்சின் மேலதிக செயலாளர் ரேணுகாவினால் தெல்லிப்பளை பிரதேச செயலாளருக்கு கடிதம் சிங்கள மொழியில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் வலி. வடக்கில் மீனவர்களின் நிலம் 212 ஏக்கரும், பலாலி வீதிக்கு கிழக்கே உள்ள 612 ஏக்கரும் விடுவிக்கப்படும் என நீண்ட காலமாகத் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது கூண்டோடு இராணுவ மயமாக்கலிற்கு முயற்சிக்கப்படுகின்றது.

இதேநேரம் வலி. வடக்கில் படையினர் நிலைகொண்டுள்ள நிலங்கள் தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தொடுத்த வழக்கு உயர் நீதிமன்றில் நவம்பர் மாதம் எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் இந்த நடவடிக்கைக்கு கொழும்பு காய் நகர்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.


MINISTRY OF TOURISM & LANDS


# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CRPLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்.எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

## எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்.எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




**4 இடங்களில் சேவை**

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா

வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:

**வசந்தி சிவராஜா - 416-616-3077**


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# Nathaswara Thavil Music Of Global Inc.

## நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு

## 25 வது ஆண்டு வெள்ளி விழா

25th ANNIVERSARY










**இடம்: RICHMOND HILL HINDU TEMPLE**
**10865 BAYVIEW AVENUE, RICHMOND HILL,**
**(BAYVIEW AND ELGINMILLS)**
**(அனுமதி இலவசம்)**




**காலம்: 16 October 2022 ஞாயிற்றுக்கிழமை**

கோவிலில் காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பம், காலையிலும் மாலையிலும் கோவிலில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.
மாலை 5:00 மணிக்கு ஆலய மண்டபத்தில் கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

நாதஸ்வர, தவில் இசை சர்வதேச அமைப்பு 25ஆவது வருட வெள்ளி விழாவைக் கொண்டாட இருக்கிறது. இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி காலை ரிச்மண்ட்ஹில் பிள்ளையார் கோவிலில் 1008 சங்காபிஷேகத்துடன் விழா ஆரம்பமாகிறது. காலையிலும் நாதஸ்வர, தவில் கச்சேரி நடைபெறும். அத்துடன் பாட்டுக் கச்சேரி, மிருதங்கக் கச்சேரி, வயலின் கச்சேரி, புல்லாங்குழல் கச்சேரி, பரத நாட்டியம் அனைத்தும் காலையில் நடைபெற உள்ளது. மாலையில் ஆலய மண்டபத்தில் இந்தியாவில் இருந்து சிறப்பாக வருகைதரும் விசேஷ நாதஸ்வர தவில் கச்சேரி இடம்பெறவுள்ளது. நாதஸ்வர வித்வான் கலைமாமணி மாம்பலம் திரு. M.K.S. சிவா அவர்கள், தவில் வித்வான் கலைமாமணி திருப்புண்கூர் திரு. T.G. முத்துக்குமாரசாமி அவர்கள் மற்றும் தவில் வித்வான் கோவளம் திரு. B. ஸ்ரீகுமார் அவர்களும் இணைந்து வழங்கும் சிறப்புக்கச்சேரியும் அத்துடன் இந்தியாவில் இருந்து வருகைதந்திருக்கும் நாதஸ்வர, தவில் வித்துவன்களின் கச்சேரியும், ரொறன்ரோ நாதஸ்வர, தவில் வித்துவான்களின் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. அனைத்து குருமார்களையும் அனைத்து ஆலய நிர்வாக சபையினரையும் நாதஸ்வர தவில் கலைஞர்களையும் மற்றும் ரசிக பெருமக்களையும் வருக வருக என வரவேற்கிறது நாதஸ்வர, தவில் இசை சர்வதேச அமைப்பு.



**விபரங்களுக்கு: நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு**
DR. ஆ. முருகதாஸ் Tel:416-420-1309 / 289-660-3850
Email: ntm97@yahoo.com web:www.nathaswarathavil.org

ஊடக அனுசரணை
ANALAI EXPRESS
Analaiexpress TV
Analaiexpress Facebook

Design and Print By Designs 2 Print @ Majestic City : Prabagar - 647.858.2290 / 416 292 4999 / www.designs2prints.com

# தனிமையிலும் இனிமை



**த**னிமை என்பது சிலருக்கு இனிமையாக இருக்கும் ஆனால் பலருக்கு மிக கொடுமையாக இருக்கும். நம்மில் சிலர் தனிமையில் வாழும் வாழ்க்கையில் பல வேதனைகளை எதிர்கொள்கின்றனர்.

தன்னை சுற்றி பலர் இருந்தாலும் மனம் விட்டு பேச நல்ல நம்பிக்கையான உறவுகள் இல்லை என வருந்தும் மனிதர்கள் அநேகம். அவர்கள் பொதுவாகவே பல சந்தர்ப்பங்களில் தனிமையை உணர்கின்றனர்.

சிலர் உறவுகளை பிரிந்து வாழ்க்கையில் தொழிலுக்காகவோ கல்விக்காகவோ தூரம் சென்று வாழும் சந்தர்ப்பங்களில் தனிமையை உணர்கின்றனர்.

இவ்வாறு ஒரு மனிதன் தனிமையில் வாழ்வதற்கு அதிகமான காரணங்களும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

இவ்வாறு தனிமையில் வாழும் மனிதர்கள் மன அழுத்தம், உறவுகளிடையே வெறுப்பு, அதிக கோபம், வாழ்க்கையில் நாட்டம் இன்மை, அனைத்திலும் வெறுப்பு, மற்றவர்களின் மீது பலி கூறுதல் போன்ற பல வழிகளில் பாதிக்கப்படுகின்றனர். இது அவர்களை எந்த அளவிலும் தவறான பல முடிவுகளை எடுக்க காரணமாக அமையும்.

இவ்வாறான பாதிப்புகளை தரும் தனிமையை தவிர்ப்பது எவ்வாறு என பார்க்கலாம்.



**தன்னை தானே நேசித்தல்** எம்மை நாமே நேசிப்பதால் நம் மனது என்றும் ஒரு நிலையில் இருக்கும். இதனால் மற்றவர்களை நாம் எதிர்பார்ப்பதை தவிர்த்துக்கொள்வோம். மேலும் இதனால் தன்னம்பிக்கை அதிகம் உண்டாகும். இது எப்பொழுதும் தனிமையில் சிறந்த முடிவுகளை எடுக்க உதவியாக இருக்கும். மேலும் மற்றவர்களின் மீதான எதிர்பார்ப்பு குறையுமிடத்து அவர்கள் மீது வெறுப்பும் உண்டாகாது.



**மற்றவர்களுடன் எம்மை ஒப்பிடுவதை தவிர்க்க வேண்டும்.** தனிமையில் இருக்கும் நேரங்களில் பல வகையான சிந்தனைகள் எமக்கு உண்டாகும். இதனால் நாமே நம் மீது அதிக சந்தேகங்கள் கொண்டு மற்றவர்களுடன் எம்மை ஒப்பிட்டு பார்ப்போம். இதை நாம் தவிர்க்க முயற்சிக்க வேண்டும்.




**நேர அட்டவணை ஒன்றை தயாரித்தல்.** நாம் அன்றாடம் புரிய வேண்டிய வேலைகளை நேர அட்டவணை ஒன்றில் ஒழுங்குப்படுத்தி அதனை பின் தொடர்வதன் மூலம் நம் சிந்தனைகள் சிதறாமல் நமது கடமைகளில் நாம் கவனமாக இருப்போம். இதனால் தனிமையை பற்றி யோசிக்க நமக்கு நேரம் இருக்காது.



**திறமைகளை வளர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.** நமக்கென பல திறமைகள் உண்டு. தனிமையில் இருக்கும்பொழுது அந்த தனிமையின் கஷ்டங்களை மட்டுமே நினைக்காமல் அந்த நேரங்களில் நமக்கான திறமைகள் எந்த துறையில் உண்டென கண்டறிந்து அதனை வளர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இதனால் நாம் தனிமையாக இருந்தாலும் நமது கவனம் சிதறாமல் இருக்கும்.



**எதிர்ப்பார்ப்புகளை குறைத்துக்கொள்ளல்.** மற்றவர்களின் மீதான அதிகப்படியான எதிர்ப்பார்ப்பு உடையும் பொழுது தனிமை மேலும் கொடுமையாக இருக்கும். நாம் நமக்கானதை செய்துக்கொள்ளவோம் என்னும் எண்ணம் ஒன்றை வைத்துக்கொண்டால் மற்றவர் மீது அதிக எதிர்ப்பார்ப்பும் இருக்காது. அவர்கள் எம்மை விலகி செல்லும் சந்தர்ப்பங்களில் அந்த தனிமை எமக்கு பாரமாகவும் இருக்காது.



**இயற்கையை இரசித்தல்.** இயற்கை என்றும் மனதிற்கு இனிமையை தருவது அதனை இரசிக்க ஆரம்பிக்கும் பொழுது நாம் பல கவலைகளை மறக்கின்றோம். அதில் ஒன்று தான் தனிமை. தனிமையை மறக்க வைக்க அதிக சக்தி உடையது இயற்கை.



**செல்ல பிராணிகளை வளர்த்தல்.** தனிமையின் வலிகளுக்கு ஒரு மருந்து தான் செல்ல பிராணிகள். அவற்றை நாம் வளர்ப்பதன் மூலம் எமது நேரமும் அழகாக மாறும் எண்ணமும் அழகாக மாறும்.



**தனிமையில் சுற்றுலா.** சுற்றுலா செல்வது பல வகையானது அதில் தனிமையில் சுற்றுலா செல்லும் நேரம் இன்னும் ஆனந்தமும் சுதந்திரமும் இருக்கும் இது தனிமையை நேசிக்க சிறந்த காரணமாக இருக்கும். இந்த தனிமை ஒரு வகையில் இனிமை என்று அறிந்தால் நமக்கு தனிமை ஒரு சுமையாக இருக்காது.

எந்த எதிர்மறையான விடயங்களும் இலகுவாக எதிர்க்கொள்ள பழகினால் எமக்கு எந்த சந்தர்ப்பங்களையும் சமாளிக்கும் தைரியம் உண்டாகும். அதே போல தான் தனிமையும் அதை நாம் நேரான எண்ணத்துடன் பார்த்தால் **"தனிமையும் இனிமையே"**.

**- இரா. சஹானா**



# பனிபொழியும் தேசத்தில் பத்து நாட்கள்

முனைவர் வே. சங்கரநாராயணன் கனடா உதயன் வார இதழில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு

## நூல் வெளியீட்டு விழா

திகதி : 21.10.2022 நேரம் : மாலை 6.30
இடம் : கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபம்
(ஆலயத்தின் கீழ்த் தளத்தில் அமைந்துள்ளது)
733 Birchmount Rd, Scarborough, ON M1K 1R5



நூலாசிரியர் முனைவர் வே. சங்கரநாராயணன் அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து நேரடியாகக் கலந்து கொள்கின்றார். கனடா வாழ் படைப்பிலக்கியவாதிகளின் உரைகளும் இடம்பெறவுள்ளன.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.




தொடர்புகளுக்கு:- 416 732 1608 , 416 732 8021, 647 244 0813



## TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

**Tel: (416) 754-4024**

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9



CROSSROAD
SHUTTLE BUS SERVICES
647-891-7725
www.crossroadshuttles.com

- East Cost Trip
- West Cost Trip
- Ottawa/Montreal Trip
- Niagara Falls Trip
- Winery Tour
- Wedding Shuttle
- Airport Pickup/Dropoff
- One Day/Multi Day Trip

- A variety of buses
- Luxury leather seats
- High end entertainment system
- High Roof
- Extended storage

Proudly serving For 5 years with customer satisfaction as our priority!




# நன்றி சொல்வோம்

------------------------------

பெற்ற தாய்க்கும் பிறந்த நாட்டிற்கும்
நன்றி சொல்வோம்.
தோளில் சுமந்து பள்ளிசேர்த்த தந்தைக்கு
நன்றி சொல்வோம்
"அ" சொல்லித்தந்த அரிச்சுவடி ஆசிரியைக்கு
நன்றி சொல்வோம்
உயர்கல்வி கற்றுத்தந்த ஆசான்களுக்கு
நன்றி சொல்வோம்.
தொழில் நுட்பக்கல்வி கற்பித்தோருக்கு
நன்றி சொல்வோம்
தொழில்தந்து ஆதரித்த தொழில் நிலையங்களுக்கு
நன்றி சொல்வோம்
வயிற்றுக்கு வயிறார உணவளிக்கும் விவசாயிக்கு
நன்றி சொல்வோம்
அவனது தோழர் எருதுகளுக்கும்
நன்றி சொல்வோம்
பகலிரவு பனிமழை பாராமல் பணிசெய்யும் பணியாளருக்கு
நன்றி சொல்வோம்
முதியவயதுப் பெற்றோரைப் பராமரிக்கும் பிள்ளைகளுக்கு
நன்றி சொல்வோம்
இன்பத்திலும் துன்பத்திலும் துணைநின்ற நண்பர்களுக்கு
நன்றி சொல்வோம்
எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் சேவைசெய்யும் மனைவிக்கு
நன்றி சொல்வோம்
மூத்தோர் எங்களுக்கு முத்தான சேவை வழங்கும் ஆசான்களுக்கு
நன்றி சொல்வோம்
கணினியும் கவிதையும் கற்றுத்தந்த ஆசான்களுக்கு
நன்றி சொல்வோம்
வருண பகவானுக்கும் சூரியத் தேவனுக்கும்
நன்றி சொல்வோம்
அகதியாய் வந்தஎம்மை அரவணைத்து ஆதரிக்கும் கனடாவிற்கும்
நன்றி சொல்வோம்
உலகை இயக்கும் ஐம்பூதங்களுக்கு
நன்றி சொல்வோம்
அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது
அதனிலும் அரிது கூன், குருடு, செவிடு இன்றிப் பிறத்தல்
எக்குறையும் இல்லாமல் இப்பிறப்பைத் தந்த
இறைவனுக்கு நன்றி சொல்வோமே!

------------------------------

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்.**
(416) 844-97453

# இவ்வார ராசிபலன்

**14-10-2022 வெள்ளி தொடக்கம் 20-10-2022 வியாழன் வரையும்**




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**மேஷம்:** விறுவிறுப்பாக செயல்படும் வாரம். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். யோகமான காலம். வேலை பளு அதிகரிக்கும். நல்லோர்களின் பாராட்டுக் கிட்டும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். எண்ணங்கள் நிறைவேறும். மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். அரசியல் ஆதாயம் தரும். உறவினர்கள் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கோரிக்கை நிறைவேறும். நாவடக்கம் தேவை. வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோ'ம் கூடும். மாணவர் பாராட்டுப் பெறுவர். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். திடீர் கடன் உருவாகும். காரிய தாமதம் ஏற்படும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. உன்னதமான காலம். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதார சிறப்பு தரும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,6,4
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,K




**ரிஷபம்:** லஷ்மி கடாட்சம் பெருகும் வாரம். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதாரம் உயர்வு தரும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். உன்னதம் நிறைந்த காலம். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மற்றவர்கள் தொல்லைகள் குறையும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். கையிருப்பு கரையும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணங்கள் உதயமாகும். பழையக் கடன் ஒழியும். வருமானத் தடை ஏற்படும். வாய்ச்சொல் பலன் தரும். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்தநிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச்செலவு ஏற்படும். நினைத்தபடி திருமணம் நடக்கும். காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. சிந்தனை வளர்க்கப்படும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. விளையாட்டு சிந்தனைகள் மேலோங்கும். புதியப்பொருள் சேரும். அந்நிய தேச பயணம் உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் திருப்தி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,L




**மிதுனம்:** சாதனை படைக்கும் வாரம். உயர்கல்வி ஆர்வம் அதிகரிக்கும். மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல்நலனில் கவனம் தேவை. நவகிரஹ அனுகிரஹம் உண்டு. வெகுமதி பெருகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மனதில் ஆனந்தம் குடிக்கொள்ளும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியம் நடந்தேறும். தேகப்பலம் கூடும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு உயரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். உடல்நலம் சீராகும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. செயல்பாட்டின் தீவிரம் கூடும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். மனக்குழப்பங்கள் தீரும். பொருளாதார நிலை உயரும். தொட்டக்காரியம் ஜெயமாகும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். காதலர்கள் தம்பதியாவார்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். விருப்பமான வாய்ப்பு கூடி வரும். கர்மவினைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சூரியபகவான், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,L




**கடகம்:** நன்மைகள் அதிகரிக்கும் வாரம். முயற்சி பலன் தரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மருத்துவச் செலவு உண்டு. திடீர் செலவுகள் அதிகரிக்கும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. மங்கள் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். தனவரவுகள் தடைப்படும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும். திருடு போன பொருள் திரும்ப கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பொன், பொருள் சேரும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். தொல்லை தருகிறவர் விலகிடுவர். வயிற்று உபாதை வந்து சேரும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். சீரான வாழ்வு அமையும். சுபவிரயம் ஏற்படும். பயணத்தால் பலன் உண்டு. வராத கடன் வந்து சேரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். நட்பு பெருகும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும். வியாபாரம் விருத்தியாகும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 4,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,P




**சிம்மம்:** பணமும், பாராட்டும் சேரும் வாரம். உறவினர் வருகையால் கலகலப்பு ஏற்படும். மருத்துவச் செலவுகள் குறையும். வரவு திருப்தி தரும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். பிரச்சனைகள் அகலும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். விரோதங்கள் விலகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழில் குழப்பங்கள் நீங்கும். காரியம் வெற்றி தரும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். கையிருப்பு கரையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய்வழி தகராறு குறையும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். பயணம் வெற்றி தரும். உறவுகளால் நன்மை ஏற்படும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். தனலாபம் பெருகும். கடன் சுமை குறையும். பூமியால் லாபம் உண்டு. நூதனப்பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும், வெகுமதியும் கூடும். தேவைகள் பூர்த்தியாகும். வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். பாகப்பிரிவினை சுமூகமாகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்ட தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Z





**கன்னி:** விரக்திகள் மறையும் வாரம். வேலைபளு அதிகமாகும். உற்சாகம் களை கட்டும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப் பொலிவு கூடும். முன்கோபத்தை குறைக்க வேண்டும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். மன அமைதி குறையும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். காரியங்கள் கைக்கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனைவியால் சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு தடைப்படும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்வி செலவு அதிகரிக்கும். நீண்ட நாளைய நோய் விலகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். குதூகலம் தாண்டவமாகும். புதிய முதலீடு லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தாய்ப்பான வாய்ப்புக்கள் பெருகும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ எல்லையப்பன், அதிர்ஷ்ட எண்: 1,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,D




**துலாம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கலைத்தொழில் லாபம் தரும். சந்தோஷமான சூழ்நிலைகள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவார்கள். திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகமாகும். ஆனந்தம் பெருகும். வெளிநாட்டு தொடர்பு ஏற்படும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். மனோ தைரியம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். புத்திரர்களால் மேன்மை உண்டு. சுபச்செய்தி வரும். கடன் பிரச்சனைகள் அகலும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணங்கள் உருவாகும். தகுதிகள் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. பணிவான பேச்சு அவசியம். விவசாயம் பலன் தரும். நண்பர்களால் உதவி உண்டு. பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். மனநிம்மதி தரும். இனிய தகவல் வந்து சேரும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். வாகன அபிவிருத்தி உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். இன்னல்கள் அகலும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவாஞ்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,3,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B




**விருச்சிகம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபடும் வாரம். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர் பாராட்டுப் பெறுவர். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு கூடும். காரியத்தடை அகலும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். வாகனச் செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். பழையக்கடன் வசூலாகும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. தொழில் அபிவிருத்தி ஏற்படும். வரவுகள் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். போட்டிகள் உருவாகி மறையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தன லாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் அதிகரிக்கும். கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். விளையாட்டுத்துறையில் லாபம் அதிகரிக்கும். அந்தஸ்து உயரும். மனதில் சந்தோஷம் அலைமோதும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். திறமையால் பெருமை சேரும். எதிரிகள் பலம் குறையும். வழக்கு வெற்றி தரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்துக்கள் வாங்குவீர்கள். தோதான எண்ணம் உருவாகும். செல்வாக்கு உயரும். உணவுத்தொழில் உயர்வு பெறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபெரிய பாளையத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 6,7,1,9
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,J

(தொடர்ச்சி 30 பக்கம்)

# அன்பின் தொனி - 666

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**மிருகங்களின் உருவம்** - Image of Beasts

பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன், அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன, அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன. நான் கண்ட மிருகம் சிறுத்தையைப்போலிருந்தது, அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவும் இருந்தன, வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது. அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன், ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக் கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி, அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள். **- வெளிப்படுத்தின 13: 1-4**

**அன்பானவர்களே!**

இஸ்ரவேலர் மக்கள் மத்தியிலேயே பல தெய்வங்களை அந்த மக்கள் தமக்கென்று ஏற்படுத்தி காலத்திற்கு காலம் வணங்கி வந்த நிலமைகள் பலவற்றை மேலே பார்ததோம். அதே போல ஆசியா, ஆபிரிக்கா போன்ற ஏனைய தேசத்து மக்களும், ஆதி வாசிகளும் பாரம்பரியமாகவும் பரம்பரையாகவும் அநேகவிதமான பெயர்கொண்ட தெய்வ வழிபாடுகளில் ஈடுபட்டார்கள் இன்னும் வழிபட்டு வருகிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. அத்தெய்வங்களின் பெயர்களையும் விபரங்களையும் தரவேண்டுமாயின் பக்கங்கள்போதாது.

**இன்றைய நிலை என்ன?**

மேலே கொடுக்கப்பட்ட விபரமான அன்னிய தேவர்கள், விக்கிரக ஆராதனைகள், மனிதனை வணங்குதல் போன்ற தவறான, பிழையான தெய்வ வழிபாடுகளைக் கவனித்தோம். காலப்போக்கில் பல தேசங்களில் இந்த விக்கிரகங்களில் பல பெயரற்று, செயலற்று நிலையலற்றுப் போயிருப்பினும், விக்கிரகங்களை வணங்கும் நிலை இன்னும் மாறவில்லை. இப்படியான தெய்வங்களும் அவைகளின் வழிபாடுகளும் மறக்கப்பட்டும், மறுக்கப்பட்டும், செயலற்றுப் போவதற்குக் காரணம், அவைகள் அனைத்தும் மனித சிந்தனையால் உருவாக்கப்பட்ட தெய்வங்கள் என்பதே. அதற்கு மாறாக இந்த நிலை நாளுக்கு நாள், நாட்டுக்கு நாடு வித்தியாசமான முறையில் அதிகரித்துக்கொண்டே போகிறதை நாம் காணக்கூடி யதாய் இருக்கிறது. இன்றய உலகில் மனிதனை மனிதன் வணங்குதல், மரித்துப்போன மகான்களையும், மகாத்துமாக் களையும் புனிதர்களாகக் கருதி ஜெபங்களை ஏறெடுப்பதும், ஏன்? சாத்தானையே நேரடியாக வணங்குகிற ஆலயங்களும் (satanic churches) இன்று பல தேசங்களில் அமைத்துச் செயற்படுவதையும் காணலாம். அன்றய நிலையோடு இன்றைய விக்கிரக வழிபாட்டை நோக்கும்போது, கணக்கிட்டுப் பெயர் சொல்லிப் பார்க்கமுடியாத அளவிற்கு விக்கிரக ஆராதனை, மனிதனை மனிதன் வணங்குதல், மரித்தவர்களைப் பூசிப்பது போன்ற பல ரகமான, கர்த்தருக்குப் பிரிய மில்லாத வழிபாடுகள் உலகம் பூராவும் பலுகிப் பெருகிக் இருக்கின்றது.

**மரித்தவர்களை வணங்கலாமா?**

மரித்தவர்களை வணங்குவதும் அவர்களுக்குச் சிலை எழுப்புவதும், அவர்கள் பெயரில் கோவில்களைக் கட்டி வளிபடுவதும் எவ்வளவு தவறு என்பதைக் குறித்து பரிசுத்த வேதாகமம் கூறுவதை நாம் கவனித்துப் பார்ப்போம்:

அவர்கள் உங்களை நோக்கி: அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும்போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்கவேண்டிய தல்லவோ? உயிருள்ள வர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ? வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும, இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை. **- ஏசாயா 8: 19-20**

உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள், இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்துபோயிற்று, சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை. **- பிரசங்கி 9: 5-6**

மரணத்தில் உம்மை நினைவுகூர்வதில்லை, பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் யார்? **- சங்கீதம் 6: 5**

நான் குழியில் இறங்குகையில் என் இரத்தத்தால் என்ன லாபமுண்டு? புழுதி உம்மைத் துதித்து, உமது சத்தியத்தை அறிவிக்குமோ? **- சங்கீதம் 30: 8**

மரித்தவர்களுக்கு அதிசயங்களைச் செய்வீரோ? செத்துபோன வீரர் எழுந்து உம்மைத் துதிப்பார்களோ? பிரேதக்குழியில் உமது கிருபையும், அழிவில் உமது உண்மையும் விவரிக்கப்படுமோ? இருளில் உமது அதிசயங்களும், மறதியின் பூமியில் உமது நீதியும் அறியப்படுமோ? **- சங்கீதம் 88: 10-12**

மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள். நாமோ, இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தரை ஸ்தோத்திரிப்போம். அல்லேலூயா. **- சங்கீதம் 115: 17-18**

**தொடரும்...**



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1018



## மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் மலையகம்

"வாழும் படியொன்றும் படியொன்றும் கண்டுகொண்டடன் மனத்தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டதமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே."

முற்காலத்தில், வடக்கையும், மலையகத்தையும் இணைக்கும் முக்கிய கேந்திர நிலையமாக, மாத்தளை நகர் விளங்கியுள்ளது. ஆரம்பத்தில் ஒற்றையடிப்பாதைகள் மூலமாகவும், பின்னர் மாட்டுவண்டிகளிலும், வடக்கிலிருந்து மலையகத்திற்கு வந்தோர் மாத்தளை கிராமத்திலே தங்கி, இளைப்பாறி, பண்டமாற்றுச்செய்து பயணிப்பது வழக்கமாக இருந்துள்ளது. மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் வரலாறு, காலத்திற்கு முற்பட்ட பெருமையுடையதாயினும், இவ்வாறான வரலாறுகளை சரியான முறையிலே எழுதப்படாமை காரணமாக, வரலாற்றுக்கு முற்பட்ட இவ்வாலயம் தொடர்பான பல விடயங்கள், கர்ணபரம்பரைக் கதையாகவே நிலைத்துள்ளது. அன்னையானவள், காலதேச வர்த்தமானத்திற்கமைய வில்வமரத்தடியிலே, ஒரு ஒப்பனைக் கலைஞருக்கு தன் திருவுருவத்தை வெளிப்படுத்திக் காட்சி கொடுத்ததாகவும், அதன்பின்னரே ஸ்ரீ முத்துமாரிஅம்மன் வழிபாடு ஆரம்பித்ததாகவும் கர்ணபரம்பரைக் கதையுண்டு.

ஆங்கிலேயர் காலத்தில் பெருந்தோட்டத்துறைக்கு இந்திய வம்சாவளி மக்களைக் கொண்டுவந்தபோது, அவர்கள் மன்னார் அரிப்பு முதலான துறைகளிலே இறங்கி, வனாந்தரங்களினூடாகப் பல்வேறு இன்னல்களை அனுபவித்து, நாளந்த கணவாய்கூடாக பன்னாகமத்தை அடைந்துள்ளனர். அக்காலப்பகுதியிலே சிறு ஆலயமாக விளங்கிய இவ்வாலயத்தைத் தரிசித்து, அவ்விடத்திலே தங்கி ஓய்வுபெற்று, பின்னர் மலையகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் செ்றுள்ளனர்.

கி.பி 2 ஆம் நூற்றாண்டிலே, கஜவாகுமன்னனால் இலங்கையிலே தோற்றுவிக்கப்பட்ட கண்ணகி தெய்வ வழிபாடு, மலையகப்பகுதியிலும் எழுச்சிபெற்றுக் காணப்பட்டது. எனினும், காலப்போக்கில் கண்ணகி வழிபாட்டிலே பின்னடைவு ஏற்பட்டது. இந்நிலையில் இந்தியவம்சாவளி மக்களின் குடியேற்றத்தால், இவ்வாறான சக்தி வழிபாட்டு முறை புத்துயிர் பெற்றது. தென்னகத்திலிருந்து குடியேறிய தமிழ் மக்கள், தமது ஊர்களிலே பின்பற்றிய கிராமிய வழிபாட்டு முறையில், மலையகத்திலும் அம்மன் வழிபாட்டை நிலைபெறச் செய்தனர். இவ்வாறன சூழ்நிலையிலேயே ஸ்ரீ மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயமும் எழுச்சிபெற்றதெனலாம். இவர்களோடு நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர், இந்துசமயத்தின்மீது கொண்ட ஆர்வமும், ஆன்மீக சிந்தனையும் மலையகத்துத் திருக்கோயில்கள் பிரசித்திபெறக் காரணமாயிற்று. இம்மக்கள் தமது வருமானத்தில் ஒருபகுதியையும், தமது உடல்உழைப்பின் பெரும்பகுதியையும் ஆலயப்பணிகளில் செலுத்தி, ஆலய வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்துள்ளனர்.

சிறுகொட்டிலாகக் காணப்பட்ட மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் பல பெரியார்களின் தனிப்படமுயற்சியினாலும், கூட்டுமுயற்சியினாலும் இன்றைய நிலையைப் பெற்றுள்ளது. இவ்வாலயம் வழிபடு தலமாக விளங்கியதோடு இங்குள்ள சத்திரத்திலே வியாபாரிகள் தங்கிச் செல்வதும் வழக்கம். இக்காலப்பகுதியில் இங்கு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியே இவ்வாலயம் மேலும் பிரசித்திபெறக் காரணமாயிற்று. ஒருநாள் இச்சத்திரத்திலே ஒரு சிறுபிள்ளை காணப்பட்டதாகவும், மறுநாள் அப்பிள்ளையின் சட்டைமட்டுமே இருக்க, பிள்ளை மறைந்துவிட்டது. அன்றிரவு திரு. நல்லமுத்து என்பவருடைய கனவிலே தோன்றிய அக்குழந்தை, அம்பிகைதான் குழந்தை வடிவில் அங்கு காணப்பட்டது என்பதைக் கூறியதோடு, அவ்விடத்தில் ஒரு கல்லும் உள்ளது அக்கல்லிற்குத் தினமும் தீபமிட்டு வணங்குங்கள் என்று கூறி மறைந்து விட்டது.

கனவிலே குழந்தை கூறிய இடத்திலே காணப்பட்ட கல்லிற்குத் தீபங்காட்டி மக்கள் வழிபட ஆரம்பித்தனர். நாளடைவில் அவ்விடத்திலே சிறுகுடில் அமைத்து வழிபட்டுள்ளனர். இவ்வாறாகக் குடில் அமைத்து கோயிலாக வழிபட வகைசெய்தவர் திரு. கருப்பண்ணசாமி என்ற பக்தராவார். இப்பெரியவர் தமிழ்நாட்டில் சிவகங்கையைச் சோந்த காளையார் கோவில் என்னும் ஊரைப் பூர்வீகமாகக் கொண்டவர். இவர் குடில் அமைத்து வழிபாடு நடத்திய காலத்திலே, இவருக்குச் சீடராக இருந்த திரு. சுப்பாபிள்ளை என்பவர், கோவிலில் பூசைகளை நடத்தி வந்துள்ளார். இக்காலப்பகுதியில் கருப்பணசாமி குடும்பத்தினர், வைகாசித்திருவிழாவை மிகச் சிறப்பாக நீண்டகாலம் நடத்தி வந்துள்ளனர்.

திரு. சுப்பாபிள்ளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் பல திருப்பணிகளைச் செய்துள்ளார். 1850 ஆம் ஆண்டு திரு. சுப்பாபிள்ளை, தமக்கு உதவியாக ஐந்துபேர்கொண்ட குழுவொன்றை அமைத்து, ஆலயப்பணிகளில் ஈடுபட்டுள்ளார். திரு. சுப்பாபிள்ளை அவர்கள், குடிலாக இருந்த கோயிலை, கட்டிடம் அமைத்து மாற்றியதோடு, இக்கோயிலைச் சுற்றிக் காணப்பட்ட நிலங்களையும் வாங்கி, 1852 ஆம் ஆண்டு அந்நிலங்களை இக்கோவிலுக்கு மானியம் செய்து வைத்ததாக, அக்காலப் பதிவேடுகளிலே காணப்படுகின்றது. திரு. சுப்பாபிள்ளைக்கு உதவியாக இந்திய வணிகச் செட்டியார்களும், யாழ்ப்பாணத்து வர்த்தகர்களும் பெரும் உதவியாக இருந்துள்ளனர். இக்காலப்பகுதியிலே தற்போது அம்பாள் எழுந்தருளியிருக்குத் மூலத்தானம், மண்சுவரால் கட்டப்பட்டு, கூரை ஓட்டினால் வேயப்பட்டது. மூலத்தானத்திற்கு முன்புறமாக, தென்னோலையால் வேயப்பட்ட மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

*வளரும்...*

## இவ்வார ராசிபலன்

*(28 பக்கத் தொடர்ச்சி)*




**தனுசு:** *எண்ணிய காரியம் கைகூடும் வாரம். வணிகத்தொழில் வளம் கூடும். உதவும் குணம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். பெருமைகள் சேரும். பழைய பாக்கி வசூலாகும். தொலைபேசி தகவல் மகிழ்ச்சியைத் தரும். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். புதிய சொத்து சேரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். புதிய எண்ணம் உருவாகும். தொழில் லாபம் கூடும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். பழைய பாக்கி வசூலாகும். சாதகமான சூழ்நிலை உருவாகும். வழக்குகள் வெற்றியை தரும். இன்றையப் பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். வரவுகளால் திருப்தி உண்டு. பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். செல்வச் செழிப்பு உயரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். மங்களகரமான காலம். மின்சாரத்தில் சற்று கவனம் தேவை. மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றப்பொலிவு கூடும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். குடும்ப சச்சரவுகள் அகலும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். குடும்ப மேன்மை உண்டாகும். வீண் விரயம் தவிர்க்கவும். பாக்கிகள் வசூலாகும். வியாபார விரயம் ஏற்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பெண்களால் பெருமை சேரும்.*
*வழிபட வேண்டிய தெய்வம்: வைத்தீஸ்வர முருகன், அதிர்ஷ்ட எண்: 8,1,4,3*
*அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,O*




**மகரம்:** *வறுமைகள் விலகும் வாரம். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்புகள் கூடி வரும். சுபச்செய்தி வரும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் வந்து போகும். கால்நடைகளால் நன்மை உண்டு. புதுமைகள் நிறைந்த காலம். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். அணிகலன் சேர்க்கை உண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிட்டும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். பயணம் பலன் தரும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. மனதில் உற்சாகம் கூடும். குழந்தைகளால் மகிழ்ச்சியுண்டு. நிதி நிலைமை சீராகும். மெத்தனப் போக்கு மாறும். பொருள் இழப்பு ஏற்படும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். நண்பர்களால் உதவி உண்டு. வேற்று மனிதரால் லாபம் உண்டு. விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். காதல் கசக்கும். உயர்கல்வி ஆர்வம் அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். எதிலும் விடாமுயற்சி அவசியம். நல்லோர்களின் நட்பு கிட்டும்.*
*வழிபட வேண்டிய தெய்வம்: முப்பாத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 6,1,2,9*
*அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,P*




**கும்பம்:** *பணவரவு அதிகரிக்கும் வாரம். துணிவோடு செயல்படுவீர்கள். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபார விருத்தி ஏற்படும். உறவினரால் அனுகூலம் உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திர சொத்து சேரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். சுபகாரியம் கைகூடும். விவாக முயற்சி வெற்றி தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கிகள் வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய தொழில் முதலீடுகளில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சகோதர வழியில் சகாயம் கிடைக்கும். காதலர்கள் தம்பதியாவார்கள். பங்குச்சந்தையில் பணம் புரளும். செல்வாக்கு மேம்படும். வாகன மாற்றம் உண்டு. கர்ம வினைகள் அகலும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு பெறுவீர்கள். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.*
*வழிபட வேண்டிய தெய்வம்: திருத்தணி முருகர், அதிர்ஷ்ட எண்: 1,9,5,7*
*அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R*




**மீனம்:** *வியாபார லாபம் அதிகரிக்கும் வாரம். மனக்கசப்பு நீங்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பண நடமாட்டம் கூடும். கணவன், மனைவி உறவு இனிக்கும். உடல்நலம் மேம்படும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். மற்றவரிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். நல்லோர்களின் பாராட்டுக் கிடைக்கும். துன்பங்கள் அகலும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். சேமிப்பு வளரும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிடைக்கும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். நட்பு வட்டம் விரிவடையும். வேண்டும் வரம் கிடைக்கும். நலமே விளையும் இனிய வாரமாகும். புண்ணியம் சேரும். பெயர், புகழ், செல்வாக்கு கௌரவம் உயரும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிடைக்கும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். உத்தியோக பெண்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். பண நடமாட்டம் கூடும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். கஷ்ட காலம் விலகும்.*
*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பண்ணாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,3*
*அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K*

STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

WE ACCEPT
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

LIST OF SERVICES
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)



LOOKING FOR YOUR Dream House?



Call SEYON CHANDRAKUMAR

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING



Carefirst Family Health Team



புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario
ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com


Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca



26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

உதயம் 1384 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 14, 2022


# பேராசிரியர் சங்கரநாராயணனை தனது அலுவலகத்திற்கு அழைத்து வாழ்த்துக்களைத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி



கனடா உதயன் சர்வதேச விருது விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருதினைப் பெற்றுக் கொள்ள வந்துள்ள பேராசிரியர் சங்கரநாராயணன் அவர்களை தனது அலுவலகத்திற்கு அழைத்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார் கனடாவின் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி.

நேற்று வியாழக்கிழமை மதியம் இந்த சந்திப்பு ஸ்காபுறோ நகரில் உள்ள ஹரி ஆனந்தசங்கரி அவர்களது அலுவலகத்தில் இடம்பெற்றது.அச்சமையம். பேராசிரியர் சங்கரநாராயணன் அவர்கள் தான் எழுதிய 'பனி பொழியும் நாட்டில் பத்து நாட்கள்' என்னும் நூலினையும் பாராளுமன்ற உறுப்பினருக்கு வழங்கினார். அப்போது அங்கு உதயன் பிரதம ஆசிரியர் "உதவும் பொற்கரங்கள் நிறுவனர் விசு கணபதிப்பிள்ளை மற்றும் மலேசியப் பாடகர் ரவாங் ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.

# "பனி பெய்யும் நாட்டில் பத்து நாட்கள்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 21 – 10 – 2022 வெள்ளிக்கிழமையன்று ஸ்காபுறோ கனடா கந்தசுவாமி ஆலயமண்டபத்தில் கனடா நடைபெறவுள்ளது




எதிர்வரும் 21-10-2022 வெள்ளிக்கிழமையன்று ஸ்காபுறோவில் அமைந்துள்ள கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபத்தில் கனடா தொடர்பான மேற்படி பயண நூல் வெளியிடப்படவுள்ளது.

இந்த நூலை எழுதிய தமிழ்நாட்டைச் சேர்ந்த சேலம் வாழ் பேராசிரியர் வே. சங்கரநாராயணன் அவர்கள் தற்போது கனடா வந்துள்ளார்.

இந்த நூல் வெளியீட்டு விழா தொடர்பான அழைப்பிதழை நண்பர்களிடம் சேலம் வாழ் பேராசிரியர் வே. சங்கரநாராயணன் அவர்கள் நேரடியாக கையளித்தார்.

பிக்கரிங் சிவன் ஆலயத்தின் சிவாச்சாரியார் கோபி குருக்கள் அவர்கள் வர்த்தகப் பிரமுகர்கள் சங்கர் நல்லதம்பி . ராம்குமார் ராமன் " மற்றும் வீடு விற்பனை முகவர் தாஸ் ஆகியோர் மற்றும் வெவ்வேறு இடங்களில் திருவாளர்கள் ஶ்ரீதரன்.கணபதி ரவீந்திரன், குமார் தம்பியப்பா. கென் கிருபா. யோகேஸ்வரன். கோபாலகிருஸ்ணன் ஆகியோர் பெற்றுக்கொள்வதையும் காணலாம். (படங்கள்:- சத்தியன்)

# உதயன் சர்வதேச விருது வழங்கப்பெறவுள்ள நிரோஷ் தியாகராஜா அன்றைய தினமே பல பிரமுகர்களைச் சந்தித்தார்

உதயன் சர்வதேச விருது வழங்கப்பெறவுள்ள நிரோஷ் தியாகராஜா நேற்றைய தினமே பல பிரமுகர்களைச் சந்தித்தார் முன்னாள் ஊடகவியலாளரான இவர் தற்போது யாழ் மாவட்டத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்.

நேற்று பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கிய அவர் உதயன் பிரதம ஆசிரியரோடு சென்று சில நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். நேற்று மாலை ஸ்காபுறோ தெற்கு பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாஹிட் அவர்களின் ஆதரவாளர் ஒன்றுகூடலில் வர்த்தகப் பிரமுகர் சங்கர் நல்லதம்பி சமீம் மொகமட் உட்பட பல பிரமுகர்களோடு நிற்பதையும் படங்களில் காணலாம்.





# மொன்றியாலில் கர்நாடக சங்கீதத்தை இளைய தலைமுறையினருக்கு கற்றுத் தருவதில் முன்மாதிரியாகத் திகழ்வது செல்வமலர் மதுரநாயகம் அவர்களின் மதுரகான மன்றம் இசைக் கல்லூரியாகும்

## இசைச் செல்விகள் உமையாழினி அபிஷனா ஆகியோரின் இசை அரங்கேற்றத்தில் உதயன் லோகேந்திரலிங்கம் புகழாரம்





"இன்றைய இசையரங்கேற்றத்தின் நாயகிகள் உமையாழினி மற்றும் அபி'னா ஆகியோரை அரங்கேற்றம் வரையும் அழைத்து வந்து மேடையில் அமர வைத்துள்ள அவர்களது குரு செல்வி நயனி மதுரநாயகம் அவர்களின் கன்னி அரங்கேற்றம் பல சிறப்புக்களை கொண்டதாக விளங்குகின்றது. (உள்ளே 12ம் பக்கத்தில் விபரமான செய்தி)

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136
